கடவுள்துணை.

புருர்வச்

சக்ரவர்த்தி நாடகம்.

இஃது

சென்னை வேளாள தேனும்பேட்டை யாகிய

சுகசங்கீத விநோதநாடக சபையார்

வேண்டுகோட்படி

தொண்டமண்டலம் வல்லகாளத்திநகர்

வி. அயோத்திதாஸ கவிராஜப் பண்டித

ரவர்கள் புதல்வரும்

சங்கீதசாஹித்ய ஜோதிடவல்[லவரு]மாகிய

இராமச்சந்த்ரபுலவ[ரவர்]களால்

இயற்றப்பட்[டு]

ம-ா-ா-ஸ்ரீ, மதுரகவி

கபாலமூர்த்திபிள்ளை யவர்களால்

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியாரது,

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1897.

Registered Copy Right.

இதன்விலை அணா-6.

MADRAS.

894.8112
3323

நூன்முகம்.

சகலபுவன சராசரங்களையுஞ் சிருஷ்டித் தழிக்கும் பகவனருளா லிப்பூமியின்கண் விளங்கு மித்திரபுர மென்னும் பதியில் அரசாண்டதிப (புரூர்வச்சக்ரவர்த்தி சரித்திரத்தை) சென்னை வேளாள தேனாம்பேட்டை பாலிய சுகசங்கீத விநோத நாடக சபையாரிதை நாடகமாகச் செய்தளிக்க வேணுமென கேட்டுக்கொண்டதின்பேரில் புரூர்வச்சக்ரவர்த்தி சகிப்பவான் மாய்கையா லனேக இடர்களை யனுபவித்து மறுபடியு மித்திரபுரத்தை வந்துசேர்ந்து பட்டாபிஷேகஞ் செய்துக்கொள்கிற வரையி லடியேன் சிற்றறிவிற் கெட்டியவாறு நூதன இந்துஸ்தான்ஜாவளி வர்ணமெட்டுகளாற் செய்யுட்களமைத்து அதற்குப்பொருந்திய விருத்தங்களும் வசனரூபங்களுமியற்றி வெளியாக்கினேன் [illegible] இதிற் றோன்று மிலக்கண விலக்கிய வழுக்களைகற்றறிந்த மஹான்கள் குறைகூறாமலு மடிமையைப் புகழாமலு மிகழாமலும் புண்ணியவானுடைய சரிதையைத் தெரிந்துக் கொள்வீர்களென தங்கள் பெரும்பேற்றினையை விரும்புகின்றவனாகிய,

இங்ஙனம்

வீ. அ. இராமச்சந்திரபுலவன்.

வித்யாகுருவணக்கம்.

விருத்தம்.

சீரேறு மவனியெலாம் புகழுந்திவ்ய
நிகழ்பகவ னருளுமென் மேலாயோங்கும்
காரேறுந் தொண்டமண் டலமேவல்லக்
சாலத்தி கழ்வீரா சாமிதாஸன்
பேரேறு நற்குலத்தில் வாய்த்தபுத்ரன்
பெட்டியோத்தி கவிராஜ் பண்டிதன்மாசு
வாசேறு மரியபொற் கழலேசெய்ன்
வந்தித்தே னநுதினமுஞ் சிந்தித்தேனே!

அவையடக்கம்.

விருத்தம்.

பாலத்தைப் பாச்சியெனப் பகருப்பாலர்
பாஷைபோ லிச்சிறியேன் பெரியோர்முன்னே
ஞாலமிசை யில்புருர்வச் சக்ரவர்த்தி
நாமனின் சரித்திரத்தை நவிலவெண்ணி
சீலமுட னாடகமாய்ச் செய்தேன்பூவிற்
சிறுமதலை மொழியிதனைச் சினங்கொள்ளாமல்
காலமுமே நல்லாசி புரிவீரென்று
கவிஞருர்களின் பொற்கழலை வணங்கினேனே!

உ

கடவுட்டுணை.

புரூர்வச்சக்ரவர்த்தி

நாடகம்.

காப்பு—விருத்தம்.

சூத்திரதார் சொல்லுதி.

சீர்பூத்த விண்ணவர்பண் ணவர்கள்தேடுந்
தெய்வமே! கருணைதரு மினியமாண்பே!
தார்பூத்த வல்லபைக்கு சுகந்தசத்யத்
தண்ணமுதே! மறைபுகலு மரியசாம்பவே
வார்பூத்த பா! புரூர்வச் சக்ரவர்த்தி
வளமோங்குஞ் சரிதையமைத வழுத்தபூவிற்
பேர்பூத்த சிவனுமையா ளீன்றெடுத்தப்
பெட்புள விநாயகனின் கழல்நமஸ்தே!

இராகம் கல்யாணி ஆதிதாளம்.

பல்லவி.

மூலாதாரமென்பொருளே-வரமருளே

அநுபல்லவி.

நாலாதாரத்தின்முத லாகிவிளங்குங்கோவே

சரணம்.

மாங்கனிக்காகவலம் வந்தவேழமுகனே!
மாவிண்ணவர்கள்தொழு மின்பமறைபோதனே!
ஓங்கும் புரூர்வச்சக்ர வர்த்திசரிதைகூற
ஓதுமுன்னவனிரு பாதமலர்நமஸ்தே! (மூலா)

வசனம்.

ஓ பக்தா ரீதிச் சபையின்கண் என்னை வருந்தியழைத்த விஷயமென்ன.

சூத்திரதார்சொல் வசனம்.

ஆண்டவா போற்றிபோற்றி அந்த இந்திரபுரத்தை அரசு புரிந்த புரூரவச்சக்ரவர்த்தி சரிதையை நடத்தப்போகின்றதா விச்சபையின்கண் இயாதொரு விக்கினம் வராமல்படிக்கு காத்தருள வேணும் ஐயனே!

கணேசன்சொல்-வசனம்.

பக்தா நீர் கோரியவண்ணம் நாமுனக்கு வரந்தந்தோமென்றாலுங் கலைகளுக்கு காரணியாக விருக்குஞ் சாரதம்பாளை பூஜித்து வேண்டினா லின்னமுனக்கு நல்லாசிர் புரிவாள் நாம் சிவசபைக் கெழுந்தருளுகிறோம் வாழி வாழி.

சரஸ்பதி துதி.

வெண்பா.

கல்விக்கு நல்லமுதே! காரணியே! பூரணியே!
அல்லிதமாய் நின்றபெருஞ் சுந்தரியே—நல்ல
மன்புரூர்வச்சக்ர வர்த்தி சரிதைக்கூற
தன்மையுடன் வந்தருளே தாய்.

இராகம் கல்யாணி தேசிய் ஏகதாளம்.

பல்லவி.

தாயே! சரஸ்பதியே!
சம்பிரமுடன்வந் தருள்!

அநுபல்லவி.

நேயமுடனேவின்றேனர்
நிகழ்த்துங் கலைவாணியே! (தாயே)

சரணம்.

அன்புடன்புரூர்வச்சக்ர வர்த்திசரிதைசொல்ல
அம்மனே மாவெண்கமல மீதிலுறையுஞ்சுகிர்த (தா)

சீர்த்திவிளங்கும்கா தேவர்க்கமுதமே ஸ்ரீ
பூர்த்தியுடனேவரந் தந்திடுங்கண்மணியே யென் (தா)

சொல்லுமசரீரியே சுந்தரமானவளே
நல்லோர்களின் நாவினில் வந்தமர்ந்திருப்பவளே (தா)

சரஸ்பதிசொல்—வசனம்.

ஓ பாலகா! என்காதலன் பிர்மதேவனிடத்தில் நான் களி கூர்ந் திருக்குமளவில் யென்னைமிகவும் வருந்தியழைத்த காரண மென்ன,

சூத்திரதார்சொல்—வசனம்.

மாதா போற்றி போற்றி இந்திரபுரத்தை அரசுபுரிந்த புரூர்வச்சக்ரவர்த்தி சரிதையை இச்சபையின்கண் நடத்தப் போகின்றதா லியாதொரு யிடர் நேராமல் மங்களமாக முடிய தங்களையியர்த்து ஸ்தோத்தியஞ் செய்தேன் அம்மணி.

சரஸ்பதிசொல்—வசனம்.

பாலகா நீர் கோறியபிரகாரம் இப்பெருஞ் சபைகளிக்க வும் இடரில்லாமல் மங்களமாகவந்து முடியவும் நாம்வரந் தந் தோம் பிர்மசபைக் கெழுந்தருளுகிறேன் வாழி வாழி.

சிவ துதி.

இராகம் சங்கராபரணம், ஆதி.

பல்லவி.

அருள்தாரதி ஐயனே
அவைகளிக்க மிகவுமித

சரணம்.

பெருமா[illegible]ன நின்னடியைப்
போற்றுகின்றேனே நல்ல (அருள்)

விண்ணோர் புகழ்பவனே!
விளங்குஞ் சம்போசிவனே! (அருள்)

புலவ னிராமச்சந்த்ரன்
புரியுந் தமிழால்பாட. (அருள்)

விக்நேசு துதி.

இந்துஸ்தான் கலைஸ் ப்யாரு.

பல்லவி.

வரந்தருவாய் ப்ரபு மாவிந்தனே!
கோவிந்தனே! ஹரி (வரந்)

அநுபல்லவி.

பெருமானேவின்கழலே போற்றிநின்றனே ஹரி (வரம்)

சரணம்.

பாண்டவர்சகாயனே!
பாரளந்தமாயனே
பாதாரவிந்தமே போற்றிநின்றனே ஹரி (வரம்)

இராவணசம்ஹாரனே!
இலட்சுமிசமேதனே!
பாதாரவிந்தமே போற்றிநின்றனே ஹரி (வரம்)

புலவன்ராமச்சந்த்ரன்
புரியுந்தமிழ்பாடி
பாதாரவிந்தமே போற்றிநின்றனே ஹரி (வரம்)

வாழி தரு.

(பலதரங்கௌசிகரை பங்கஞ்செய்மேனகா-யென்றமெட்டு)

ஆதிமூலனே ஹரி கோவிந்தா நின்கழலும்
அநவரதமிக வோங்கிவாழியே!

சாற்றுஞ்சுக சங்கீதசபையுந்
தகை-தகை-தகை-யோங்கிவாழியே!

விண்ணோர்பாவாணர்புவியோர்
தகை-தகை-தகை-ஓங்கிவாழியே!

புலவன்ராமச் சந்திரன்றமிழ்தன்
தகை-தகை-தகை-ஓங்கிவாழியே!

சிவசுப்ரமண்யர் தரு.

(சாமராஜா வென்றவர்ணமெட்டு.)

பாலசுப்ர மண்யாவுனைப் போற்றினேன்

பார்வதிபாலனே! பன்னிருகையனே!
பாரில்விண்ணவர்தொழும் வேலனே! (பால)

சூரசம்மாரனே! திருமும்பரக்யாதனே!
சுந்தரமாக வருள்தாமுன்னே! (பால)

மகிபன்புரூர்வச்சக்ர வர்த்திசரிதநாடக
வர்ணமியின்மீதேதிவா மூன்னே (பால)

புலவனிராமச்சந்த்ரன் புரியுஞ்செந்தமிழினுல்
பூரணமாக வென்றும்பாடவே. (பால)

வாழி துதி.

(க்யாக்கரோமனா ரஞ்சியென்ற-இங்குஸ்தான்மெட்டு)

மங்களமாக விநோதசபையும் வாழியவே!
வாழியவே-வாழியவே-வாழியவே!

சிவனுமையாளின் பாதஞ்சீராக வாழியவே!
புள்ளிமயிலேறி வருங்குகன்கழல் வாழியவே!
நங்கைவள்ளிதெய் வானையின்வளர்பதம் வாழியவே!
சற்சனரும்வித் வான்களுஞ்சபையோரும் வாழியவே!
மகிபன்புரூர்வச் சக்ரவர்த்திகதை வாழியவே!
புலவனிராமச் சந்திரன்புகழ்தமிழ் வாழியவே!

சபைக்கு மோகினிவருதல்.

(இராம்மஜான்ஜாத்தஹேசர்பார்க்குசலாமென்றமெட்)

ஸ்ரீராமச்சந்த்ரதேவாவுனை நம்பிவந்தனே!
மோகினிவந்தனே!
மாவிந்தனே! கோவிந்தாவுனே
போற்றிநின்றனே-மோகினி
பாண்டவர்க்கு தூதுசென்ற
பரமசீலனே! மோகினி

வசனம்.

வைகுந்தவாசா ராமச்சந்த்ரதேவா அடியாள் மோகினி என்னைக் காப்பாற்றவேணும் சபையைப் பார்க்கும்போது விந்தையாகத் தோணுதே ப்ரபு.

மோகினிராஜன் சொல்.

இராகம் ப்யாகு ஜாவளி ரூபகம்.

இகாரோ வெகுசுந்தரமா
யிருக்கின்றதே தான்

இனியேது - யென்மனம்போது
மையலில்மீது - மெத்தவாக் தோணுதே

வசனம்.

ஆ நீயார் உன்பேரென்ன அடி யென்றஞ்சிதமே.

மாரன்கணையாலென் மனம்வாடலாகுதே
ஆமாதே - யென்னிடம் தடுதே
சூதுவையாதே - மையல்மெத்தவாகுதே

வசனம்.

நங்கையே நீயேன் மௌனமாகப் பேசாமலிருக்கின்றாய் உன்வாயால் ஒருமொழி பகர்வாயென் அன்னமே.

மோகினிக்கும் மோகினிராஜனுக்கும் தர்க்கம்.

லாவணி.

மையல்கொண்டுநீபோது-பல
வார்த்தைசொல்லிடலாகாது
தையலேயென்றுநீவாது
சவைதனியிற் பேசவேபோகாது-அடே
வையகத்தினிலிதுகூது-உன்
வாயாற்பிதற்றிடப்போகாது
சையோகநடத்தையென்னாது
தயவாகயென்னைவிட்டுயெழு

வசனம்.

அடா நீயாரென்னாமதேயத்தை கேட்கவுந் தருமா ரென்னைவிட்டு அப்புறம்போடா மன்மதனைப்போ லென்முன் னடிக்காதே துஷ்டா.

மோகினிராஜன் சொல்

லாவணி.

எதுயென்பேரிலேநீகோபம்-ஆ
இயம்பாதேவுனக்கதுபாபம்
மாதேநான்மோகினிராஜன்
மயங்காதே நின்னைகூடவந்தேன்-ஆ

வாதுசெய்யாதுனை தொழுதேன்
மலர்பாணமெனுங்கணையால் சோர்ந்தேன்
போதுவனைத்திடவே தந்தேன்-புகழ்
பெண்ணே வந்தணைக்கநின்றேன்.

வசனம்.

கண்ணே நாரேஜ மோகினிராஜன் இப்புவியின்கண் மன்மதனுமெனக்கு நிகரில்லை உன்னுடன் கூடி சுகிக்கலாமென வந்தேன் ரஞ்சிதமே.

மோகினிசொல்

லாவணி.

பெண்ணே கண்ணேயென்றுபேசி
புகழாகக்கைகளை நீ வீசி-அடே
என்னிடஞ்சொல்லாதே சீச்சி
இத்தட்சணமேதூரகில்லு நோஷி
என்றுமேத் தன்னையேல்லாநாசி
இயப்பவுனக்கிது வந்தாட்சி
இன்னம்பார்த்திடுவே வேசி
இதுகளைமனதில் மிகயோசி.

வசனம்.

அடா நாரேஜ இவ்வனத்திலிருக்கு மோகினி நீ யென்னை பெண்ணே கண்ணே யென்று வீணாகக் கரங்களைவீசி பேசாதே தூரகில் நோஷியே,

மோகினிராஜன்சொல்

லாவணி.

தோஷியென்று சொன்னமாதே-அது
சகிர்தமொழி யெனக்கிப்போது
கூடிவிரகந் தீரவாது
குயிலே நீ சொல்லாதேயிப்போது-அடி
நேசிக்க யென்தனைவோது
நினைக்காதே வெகுவாய்ப்பெருங்குதா

காசினில்பிணியவென்மாது
கனிவாகக் கூடுவோமிபோது

வசனம்.

ஆ யென்கண்ணே நீ யென்னை தோஷியென்று சொன்ன அது யெனக்குமிகவுஞ் சந்தோஷமான வார்த்தையே வாராய் சுகிப்போம் சரசியே.

மோகினி புலம்பல்.

(எத்தன அரசமோரியா-யென்றமெட்டு.)

ஏதேயென் மனமுங்கலங்குதே!
ஏழிலாய்ப்போதே!

தானுகவந்துயிவர் சாற்றுமொழிகளாலே
சரசமிகவாய் தோணுதே! எழிலாய்

மயிலேகுயிலேயென்று மன்னவனுரைக்கயின்று
மதவாளிப்போல பாயுதே! எழிலாய்

மோகினிராஜனுக்கும் மோகினிக்கும் தர்க்கம்.

(வேறுலாவணிமெட்)

கண்ணே வுன்கருத்தி லிருப்பதைநீகூறு
கதியென்றடைந்தேன்பாரு
கலங்காமலே விபரமாய்ச்சொல்லிதேரு
அன்னமே! வுந்தனைக்கண்டுயோன்வந்தேன்
அடிமினியென்னவேண்டா மருகவாதொழுதேன்

வசனம்.

சரசி யென்மயக்கி நிற்கின்றாய் வாரும் போகலாம்.

மோகினிசொல்.

(வேறுலாவணிமெட்)

கருத்தைதெரியப்பட சொல்லுவேன்சாமி
கனிவாகப்பெருங்காமி
கடத்தைவாவென் றழைத்திடுமிக்கபூமி
உருத்தலுடனேசிவன் கழலைப்பணியாமலே
உளிரிப்போகாதே கெடுவாய்மதத்தாலே

வசனம்.

புவியில் மண்ணென்றும் பெண்ணென்றும் பொன்னென்றுஞ்சொல்லு மிந்தவாழ்வுஞ் சம்பத்து மில்லையல்லவே அந்தச் சிவப்பெருமான் கழலைநாடி யிரக்ஷிப்பதே புருஷலட்சணம் போகத்தால் கடாக்ஷிக்கும் போய்விடுமே நாயகி.

மோகினிராஜன் சொல்.

(வேழலாவணிமெட்டு)

கூடவேஜெனித்தது மதனென்றுமன்பு
கூறிடலாமோ அதுவேம்பு
குழிலேநாம்பிறந்ததுவே மகாயின்பு
மோடிச்செய்யமனம் வையாதேகண்ணே
முத்திக்குஇல்லறமே பெரிதென்றுசொல்வேன்

வசனம்.

ஆசாரியே சகலசுருதிகளூம் இருவள்ளுவநாயனார் முதலானப் பெரியோர்கள் முத்திக்கு இல்லறமே பெரிதெனச் செப்பியிருக்கின்றார்கள், அந்த சிவப்பெருமானுக்கும் உமையவளென்கிற பெண்சாதியில்லையா ஏனிதுகளை யோசிக்காமல் ஞானத்தைப்பேச துணிந்தாய், மயிலே நீயினி யதுகளை மனதில் வையாமல் யென்னுடன்கூடி சுகிப்பாயென் கட்டிக்கரும்பே.

மோகினிராஜன் சொல்.

இராகம் சுருட்டி அதிதாளம்.

பல்லவி.

கண்டவுடன்மானே தாகமேவிதெது
காதலியென்னை சேரவாருமே

சரணம்.

தண்ணமுதே தயைச் செய்திடுச்சமயம்
தரணியில்மதன்கணைப் பொல்லாதே-நின்
வில்வப்பழம்போன்ற கொங்கைதனைக்கண்டு
மையல்சகிக்க போகாமயிலே

அத்தர்புனுகுஜவ் வாதுப்பரிமள
வாடையால்சிந்தைக் கலக்குதையோ-உன்
முத்துமொழிகளால் மோகம்பெருகுது
மோடிச்செய்யாதே யெந்தன்குயிலே

வசனம்:

ஆ என்சரசி இனி மோடிச்செய்யாதே வாரும்போகலாம் கனியே.

மோகினிசொல்.

(வேலவனேயுந்தனடைக்கலமெல்லா-மென்றமெட்டு)

இன்பமுள்ளஎங்கள் கருணைத்துரையே!
இதுவேசமயம் வாடாபோகலாம்
கந்தமலர்சோலைக் குள்ளே!
கலவிபுரிந்திடவே நல்ல (கந்த)
மயில்களாடுது குயில்கள்பாடுது
மாடப்புறாக்கள் வந்துகாவுது (கந்த)
மலர்கள்வாசனை மிகவும்வீசுது
மதனனுந்தென்றலும் வந்துதாவுது (கந்த)

மோகினிராஜனும் மோகினியுஞ்சபையைவிட் டேகுதல்.

இந்துஸ்தான் ஜோல்டப்பா.

சபையோர்களே உங்களுக்கெங்கள் வந்தனமிதோ
சந்தோஷமுடனுங்களுமே போய்வருகின்றோம்

சபைக்குகட்டியன்வந்து சொல்

விருத்தம்.

சீர்மேவு முலகமெல்லாந் திகழுட னொருகுடைக்கீழ்
தார்மேவு மரசுசெய்யுந் தகைவிரா ஜாதிராஜன்
வார்மேவு புரூர்வச்சக்ர வர்த்திமா மகிபனிந்த
பேர்மேவு கொலுவிற்கன்பாய் புகழுடன் வருகின்றானே.

வசனம்.

சபையோர்களே இராஜாதிராஜனைபுரூர்வச்சக்ரவர்த்திதன் மந்திரி பிரதானிகளுடன் கொலுவிற்குவருகிற விதங்காண்க.

சபைக்கு வீரபாகுவருதல்.

தங்கமெட்டு.

ஜாதியில் பெரியவனென்
சங்கம் புகழ்பவனென்
சோதிக்கனைக் கண்டவன்புவியித்
செப்புதேன் சேனுமையே

வசனம்.

ஓ ஐயமாரே சாதிஜாதியில் பெரியவன் சங்கப்புலவர்கள் முதலானவர்கள் மதிக்கும்படியானவனாம் அந்தசிவப்பெருமானுக்கும் சொந்த மாமனுகவேனும் நீங்களுமெனக்கு பாத்தியந்தான் இன்னாந்செல்றன் கேளுங்கோ ஆண்டே.

தக்கமெட்டு.

நீங்கள் அறிக்குந் சாமி
நிறைதசப்ர மண்யனுக்கு
நாங்களும் பெண்கொடுத்தோம்-புவியில்
நல்லமச்சானுக்குதே

வசனம்.

ஓ ஆண்டேமாரே நீங்க அறிக்கும்படியானச் சாமி சிவசுப்பிர மண்ணியனுக்கு பெண்கொடுத்தது ஆர் தெரியுமா எந்சொந்த தங்கச்சிவள்ளியை கொடுத்திருக்கிறோம் நீங்களும்எனக்கு ஒறவுதான் ஐயமாரே.

தக்கபாட்டு.

சீயும்பறையுமாச்சு
சீட்டுபுலிபறையாச்சு
நானும்பறையுமாச்சே-புவியிற்
நவிலுவேனீர்தெரிகிர்

வசனம்.

எந்சாமி உங்களுக்கு தெரியாத சேதியெல்லா நல்லாசெல்றன்கேளுங்க இந்தபூமி யெதிலே அடக்கந்தெரிமா பறைக்குள்ளடக்கம்" சீயும்பறை நானும்பறைதான் பரமாகிய நம்பச்சாமி யெங்கியும் பரவிரிருக்கிறபடியால்தான் பரம்பறையென பேர்வந்தது ஐயமாரே.

வீரபாகுவைவெட்டிச்சி தேடிவருதல்.

(என்னுண்டமாரேயென்கணவ-னென்றமெட்டு)

என்னையமாரே யென்புருச்சன்
எங்கேசெல்லுங்க-அவரெங்கே
கூவுகொண்டாரச்செல்லி
கோமாண்சபைக்கிவந்தார் (ஐய)
காடிக்கள்ளைகுடித்து
கனேபட்டுவுய்ந்தாரோ (ஐய)

வசனம்.

ஏஞ்சாமி சாமி யெம்புருச்சன் யென்னே கூடிகொண்டா ரச்செல்வி இங்கவந்தாங்க யெங்கசெல்லுங்க ஆண்டமாரே.

சக்ரவர்த்தி கொலுவிற்றுவரும் விதம்.

விருத்தம்.

ஓரேறும் விண்ணவர்பன் னவர்கள்போற்றுந்
தென்னமுதே மான்மழுஉ கையணிந்தகோவே
வாரேறு முத்தொழிலைப் புரியுங்கிர்ய
மருத்துவமே மறைமுரண வெறையும்பாகே
தாரேறு கன்னிகையே விளக்குருநாக
தத்துவமே கருணைதரு மெய்நிலவிலாசப்
பேரேறுஞ் சிவப்பெருமான் பதத்தையென்றும்
பெற்றியுடனே மனதிற் போற்றிவேனே.

தேசவிசாரணை.

இராகம் காம்போதி கண்ணிகள்.

சக்ரவர்த்தி.

மதியிற்சிறந்தயென் மந்திரியேயெம்தேசம்
வளமோங்கிருக்கின்றதா-மந்திரி

மந்திரி.

மன்னனேயெம்தேச மெல்லாஞ்செழிப்பாக
வளம்பெற் றிருக்கின்றதே-அரசே

சக்ரவர்த்தி.

ஆலயங்களிற்பூஜை தவறாமலேந்தணர்கள்
ஆறதினமுஞ் செய்கின்றார்களா-மந்திரி

மந்திரி

அநுதினமுந்தவறாமல் வேதியர்களசற்பூஜை
அரசேநடக்கின்றதே-அரசே

சக்ரவர்த்தி.

குடிபடைகள்குறைவின்றி க்ஷேமமாயவர்களுங்
கூர்ந்திருக் கின்றார்களா-மந்திரி

மந்திரி.

குறைவின்றிகுடிபடைகள் சந்தோஷமாகவே
கூடிருக்கின்றார்களே-அரசே

சக்ரவர்த்திசொல்-வசனம்.

மெத்தசந்தோஷ மந்திரி இப்போது நம்துசபைக்கு பரத சங்கீதத்திற்சிறந்த நடனமாதரை அதிசீக்கிரம் தருவியும்.

மந்திரிசொல்-வசனம்.

இக்ஷணமே நடனப்பெண்களை அழைப்பிக்கின்றேன் வேந்தே.

மந்திரி கட்டியனுக்குச்சொல்-வசனம்.

கட்டியா நடனமாதரை அதிசீக்கிரம் அழைத்துவாரும்.

கட்டியன்சொல்-வசனம்.

இதோ அழைத்துவருகிறேன் மந்திரி.

நடனப்பெண்கள்வருகிறவிதம்.

இராகம் காம்போதி ஆதி.

அழகுள்ள துரை யிவர்தானடி-சகி
சரி-கம-பத-நிச-ரித-மக-ரி-ச-மக
இந்திரபுரத்தையாளும்
எந்தலிவர்தானடி (அழகு)
படிபன்புரூர்வச்சக்ர
வர்த்திசுந்தனடி (அழகு)
புலவனிராமச்சந்திரன்
புகழும்வள்ளல்தானடி. (அழகு)

சக்ரவர்த்திசொல்-வசனம்.

நம்முன் நடனஞ்செய்த மாதர்களுக்கு ஆடையாபரண பொற்பரிசு தந்தனுப்பு மந்திரி.

மந்திரிசொல்-வசனம்.

அப்படியே கொடுத்தனுப்புகிறேன் அரசே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி கொலுவீற்றிருக்கிற சமயத்தில் சூரியபகவானுடைய குமாரன் சநீஸ்பரன் பிராமணவேடம்பூண்டு அரசன்முன் வருகிறவிதங்காண்க.

(இராமச்சந்திரா குவீர்-என்றமெட்டு)

ஆரியனும் நானே! மஹா
பாரினிலென்னைப்போல் பார்வியொருவரில்லை
வீரியமுள்ள சநியன்தானே-மஹா

தேவர்கள்முதலோரை கெடுத்தவன்முன்னே
சிறைதனிலிலங்கையில் வைத்தவனுன்-மஹா
மேட்டிமையுள்ள வரிச்சந்திரராசனை
தோட்டிக்குவடிமைபாய் செய்தவனுன்-மஹா

சக்ரவர்த்தி சநியனுக்குச்சொல்-வசனம்.

போற்றி போற்றி ஐயரே தேவரீரிந்த பொற்பீடத்தின்மீதிட்டாரும் தாங்களெந்தவூர் தங்கள்பேரென்ன இயாது விஷயமாக இவ்வளவுதூரம் வந்தீர் பகரவேணுஞ் சுவாமிகளே.

சநியன் சக்ரவர்த்திக்குச்சொல்-வசனம்.

ஓய் புரூர்வச்சக்ரவர்த்தியே உமக்காசிர்வாதம் வாழிவாழி நான் சூரியபகவான் குமாரன் என்பேர் சநியனென்பார்கள் தற்சமயம் நானுன்னிடம் சொந்தகாரிய மாக வந்தேனெனதை யிந்த பிராமணன் கேழ்க்கப் போகின்றானென நீர் மனதில் சிந்திக்கவேண்டாம் அதாவது சிலவிஷயங்களைச் சொல்லுகிறேன் கேள் தேவர்கள் அசுரர்கள் கின்னரர்கள் மனுஷர்முதலானவர்களுக்கு என் நாமதேயத்தைச் சொன்னால் நடுநடுங்கிவிடுவார்கள் புவியிலவர்களுடைய ஆஸ்திகள் பூஸ்திதிகள் நாடுநகரங்களியாவையும் என்மாய்கையா லடக்கிவிடுவே னிப்படி சகலரையுங் கெடுத்துவைக்கிறவன் சாயாதேவிக்கும் சூரியபகவானுக்கும் பிறந்தவனுன் சகலஜெயமுங் கொண்டவன் னென்னை அநேகம் பெரியோர்கள் மிகவுங் கொண்டாடுவார்க ளாகையால் இப்போது உம்மிடம்வர இளமைநல்லதோ முதுமைநல்லதோ சம்மதியானகாலத்தை நிதானித்து சொல்வீர் ஓய் சக்ரவர்த்தியே.

சக்ரவர்த்திபுலம்பல்.

(லம்போதரகிரிஜாநந்தனை யென்றமெட்டு)

ஐயா வேதியரே சொல்லுவேன்கேளும்
அடியனுக்கிளமையில் வந்தாலல்லோபெரியதுன்

முதுமையில்வந்தால் சகிக்கப்போகாதே
முற்றிலுமுனக்கு நம்பியான்பணிக்கிறேன் (ஐயா)

எல்லாமுன்செயலே யிப்பொ தினிப்பகர்வேன்
எத்தவிதமுமென்ன யான்கிதுங்கடனே (ஐயா)

வசனம்.

ஐயா சநீஸ்வரரே முதுமையான காலத்தில் தேவரீருடைய பார்வைவந்தால் பொறுக்கப்போகாது ஆனதா லிளமையில்தானே தங்களுடைய மகிமைகளைக்காட்டி யெப்படியாகிலு மென்னை யிரட்சிக்கிறது தங்கள்கடமை அருட்புரியவேணுஞ் சுவாமிகளே

சநியன்சொல்-வசனம்.

ஓய் சக்ரவர்த்தியே நீர் நினவியவண்ணம் நாம்நடத்துவோம் போய்வருகிறோம் வாழி வாழி.

பொது-வசனம்.

ஆகோ வெப்படியென்றால் சநியன் சமயம்பார்த்துக் கொண்டிருக்கும் காலில் இந்திரபுரத்தி லிருக்கும் குடிகளுடைய பயிர்களை மிருகங்களழிக்கின்றதென குடிகள் சக்ரவர்த்தியிடம் வந்த பயபிடுகிற விதங்காண்க.

குடிகள் முறையிடும்விதம்.

இராகம் ப்யாகு ஜாவளி ரூபகம்.

போச்சே பயிர் போச்சே பயிர்
போச்சே அரசே
எங்கும்புகழும்புரூரவச் சக்ரவர்த்தியே யெங்கள்
மிருகங்கள்வந்து கொள்ளைசெய்யுதே
மேதினியிலெங்கள் மனமும்நோகுதே
அரசேயுமக் கபயமாக
அனைவோரும் வந்தோமிப்போது

வசனம்.

போற்றி போற்றி சக்ரவர்த்தியே நாங்களிட்ட பயிர்களையெல்லாம் மிருகங்கள்வந் தழிக்கின்றதே யென்னசெய்வோம் நாங்கள் ஜீவிப்பதெப்படி கிஸ்திகளையெப்படி செலுத்துவோம் அரசே!

சக்ரவர்த்தி மந்திரிக்குச்சொல்-வசனம்.

மந்திரி நான் வேட்டைக்குப்போகவேண்டும் வேடர் வில்லியர்களை அதிசீக்கிரம் அழைப்பிப்பாய்.

மந்திரிசொல்-வசனம்.

இந்தட்சணமே வேடர்களை அழைப்பிக்கின்றேன் வேந்தே!

மந்திரிகட்டியனுக்குச்சொல்-வசனம்.

கட்டியா வேடர்களை சீக்கிரம் அழைத்துவாரும்.

கட்டியன் மந்திரிக்குச்சொல்-வசனம்.

இதோ அழைத்துவருகிறேன் மந்திரியே.

சக்ரவர்த்திகுடிகளுக்குச்சொல்-வசனம்.

குடிகளே நீங்களேன் துயரப்படுகிறீர்கள் நமக்குச் செலுத்தவேண்டிய வரிகளைச் செலுத்தவேண்டாம் அதை உங்களுக்கு இனாமாகச் செய்தேன் நீங்களிப்போ தென்பின் வேட்டைக்குவாருங்கள் குடிகளே.

சக்ரவர்த்திவேட்டை-தரு.

இராகம் ஆரபி ஆதி.

பல்லவி.

வேட்டையாடுவோம் வாரீர்வன
வேடர்களே மஹாதீரர்களேவன

அநுபல்லவி.

கனமோங்கிடும் வேடவில்லியர்களே இதோ
காணுது வேங்கைபுலி வோரிதுபாய்ச்சலுடன் (வே)

சரணம்.

முள்ளம்பன்றிகளிதோ பள்ளத்திலடங்குது
மூர்க்ககரடிகளி நாய்களுமோடுது
தெள்ளறவேசம்மாரஞ் செய்கிறேன்பாருங்கள்
தேசக்குடிகளே வீசிலடிநீங்கள். (வேட்)

வசனம்.

அடா வேடர் வில்லியர்களே என்குடிகளே நாமெல்லாமிருகங்களையும் வதைசெய்துவிட்டோம் போய்வாருங்கள்.

குடிகள் சக்ரவர்த்திக்குச்சொல்-வசனம்.

அப்படியே போய்வருகின்றோம் வேந்தே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி குடிகளை பாதுகாத்து வரும்நாளில் சகிபகவான் மாய்கையால் வேறு அரசர்கள் இந்திரபுரத்திற்கு பதினாகவழியில் முற்றிகைபோட்டிருக்குஞ் சங்கதியை மதிதிரனென்கிற மந்திரிதெரிந்துதூதுவர்கள்மூலமாக அரசனுக்கு தெரிவிக்கும் விதங்காண்க.

சக்ரவர்த்திக்குவந்தகே[illegible]ணகாலத்தைமந்திரிநினைத்துபுலம்பல்

இராகம் முகாரி விருத்தம்.

கங்கைமான்மழுவுதரித்தகர்த்தனே யெவைகளையாரும்
பங்கஞ்செய் திடவேயிந்தப் பகைஞர்க ளொருங்குகூடி
எங்கள்நற் பதியில்வந்து வெளிலாய்முற் றிகையும்போட்டார்
நம்மென தரசன்கண்டால் துயர்மிகப் படுவாரே.

இந்துஸ்தான் - காபி கண்ணி.

ஆ சிவனே! யென்செய்வேன்
இப்போதே காருமே!
வேறரசர்கள்வந்து முற்றிகையிட்டாரே
வேந்தனுமறிந்தால் துயரப்படுவாரே
சநியனின் செயலோ-விது
சங்கரா இப்போது-வேந்தனு
காலத்தின் செயலோ-தேவா
கலங்குதே யென்மனது-வேந்தனு

வசனம்.

ஓ தேவா காலத்தின்செயலோ அல்லது சநியன்மகத்துவமோ வேறரசர்கள்வந்து இந்த இந்திரபுரத்திற்கு பதின்காத வழியில் முற்றிகையிட் டிருக்கின்றார்களே எனதரசன் தெரிந் தால் மிகவும் துயரப்படுவாரே யென்னசெய்வேன் சிவனே,

மந்திரிசக்ரவர்த்திக்கு கடிதம்யெழுதுதல்.

இராகம் அசாவேரி விருத்தம்.

ஏர்கொண்ட மா! சக்ர வர்த்தியே நின்சமூகம்
யெழுதுவது யென்னவெனிலோ
ஏந்தலே! இந்திரபுரத்திற்கு பதின்காத
வழிதனில் மன்னவரெலாம்
வார்கொண்ட முற்றிகைப் யிட்டுயோர் செய்யவே
வந்திருக் கின்றார்களே
வகையென்ன மோபுவியில் சநியனின் மாய்கையோ
வள்ளலே! யறிந்திடரே.

மந்திரி தூதுவர்கட்குச்சொல்-வசனம்.

ஆரடா தூதுவர்களே! இக்கடிதத்தைஅந்தபுரத்திலிருக்கும் நமதுசக்ரவர்த்திக்கு அதிசீக்கிரங் கொண்டுபோய் கொடுங்கள்.

(மந்திரிக்கு தூதுவர்கள்சொல்-வசனம்)

இதோ கொண்டுபோய் தருகிறோம் மந்திரியே.

(தூதுவர்கள் சக்ரவர்த்திக்குச்சொல்-வசனம்)

போற்றிபோற்றி சக்ரவர்த்தியே தமதுமந்திரி தங்களுக்கு இக்கடிதத்தை கொடுத்தனுப்பினர்.

சக்ரவர்த்தி கடிதத்தைக்கண்டு-புலம்பல்.

இராகம் மத்தியாமாவதி விருத்தம்.

முப்புரமெரித்தசம்போ முதல்வனேநினையல்லாமல்
இப்புடவியிலேவேறு மியம்பிடத்துணையுமில்லை
அப்பனே! வேந்தர்கூடி அவர்கள்முற்றிகையுமிட்டார்
தப்பிதஞ்செய்தேனில்லை சநியனின்மாய்கைதானே.

(கொய்ஞுபீலேதினக்கி யென்றவர்ணமெட்)

காலம் நெருங்கியதே சிவனே!

ஞாலத்திலுள்ள வரசர்கள்வந்து
நாதனே! முற்றிகை யிட்டுபோர்செய்ய
அண்டம்புவியாவு மமைத்தவாண்டவனே
அரியவிண்ணவர்கள் பணிந்திநிற்தேனே
எல்லாம்நின்செயலே! யிதாதினிப்புகர்வேன்
எந்தையே! புனையன்றி யில்லையெமக்கே

வசனம்.

சிவனே! என்பட்டணத்தில் அரசர்கள்வந்து முற்றிகைப் போடவுங் காலமாச்சுதா யெல்லாம் நின்செயலே! இனி யென்னசெய்வேன் சம்போ.

சக்ரவர்த்திதூதுவர்கட்குச்சொல்-வசனம்.

தூதுவர்களே போய்வாருங்கள் இதோ வருகிறேன்.

பொது-வசனம்.

சக்ரவர்த்தி மந்திரியனுப்பிவைத்த கடிதத்தைக்கண்டுவெகுவாயோசித் திருக்குமளவில் அரசி ஜெயப்பிரதைவந்து சொல்லுகிறவிதங்காண்க.

ஜெயப்பிரதை சக்ரவர்த்திக்குச்சொல்

இராகம் பைரவி விருத்தம்.

கண்மணிப்போன்றயென்றன் காதலாகீருமிப்போ
உன்னிதமாகவெந்த னுடன்கூடிவிளையாடாமல்

மன்னவா! யாதுகோப மனதினில்வந்ததுமென்ன
இன்னதென்றெனக்கண்டாக யேத்தலேவிளம்புவீரே.

இராகம் பைரவி ஆதிதாளம்.

என்னிடம்பேசாமல் யேதோவொருவாராய்
இருப்பதுயேனோ பிராணநாதா
மன்னவனேயுன்மனச் சஞ்சலமதைச்சொல்லு
கன்னல்மொழியாள்கேழ்க்க கனிவுடனே இப்போது

வசனம்.

ஆ யென்பிராணநாயகா நீரேன் யென்னிடம் பேசாமலும் விளையாடாமலும் ஒருவாராக யிருக்கின்றீர் மனவருத்த மென்ன காதலா.

ஜெயப்பிரதைக்கு சக்ரவர்த்திசொல்

இராகம் முகாரி விருத்தம்.

கீர்த்தியாயெனக்கமைந்த கிளியருங்குயிலேபேடே
பார்த்திபர்வந்துநம்மைப் பதியின்முற்றிகையும்போட்டார்
சீர்த்திறதல்லநெஞ்சந் திடுக்கிடச்சனியன்மாய்கைப்
பூர்த்தியாய்வாய்ந்ததாலே பொல்லாதகாலம்பெண்ணே.

(தெய்வலோகம்போனநாதன்-யென்றவர்னமெட்டு)

பெண்ணே ஜெயப்பிரதையேகேள்
பேசுமீசன் சோதனையோதான்
புகல்வேனிப்போ எந்தன்கண்மணியே
நவிலும்விதிவந்ததானே
நடுங்கச்செய்ய காலமாச்சுதே
நம்பதிக்கு போர்கள்போலவே
போர்கள்செய்ய வரசர்களும்
புவியில்முற்றிகை தானிட்டார்களே
பெண்ணே! சனியனின்மாய்கையே
விதியையன்றி வருமோவில்லை
வேதன்முந்தி யெழுதினப்படியே
விளங்குமதி முகவதனகண்ணே!

வசனம்.

மாதே ஜெயப்பிரதா நமதுதேசத்தின் பதின்காதவழியில் அரசர்கள் முற்றிகைப்போட்டிருக்கின்றார்களாம் நமக்குகெடுதியானகாலம் நெருங்கியது யென்னசெய்யலாம் காதலி.

ஜெயப்பிரதைசக்ரவர்த்திக்குச்சொல்.

இராகம் நாதநாமக்கிரி விருத்தம்.

வருவது வந்தேதீரு மனதினிற் க்லேசம்வேண்டாம்
பெறுவது கடமைதானே புகழ்சிவன் செயலேயெல்லாம்
அறநெறி தவராநெய்த வண்ணலே! மூன்றுக்தேறித்
தருணத்தில் நித்ரைசெய்ய சம்பிரமாய் வந்தீரே.

வசனம்.

நாயகா நாமென்னசெய்யலாம் எல்லா மந்தசிவபெருமா செயலே! வருகிறதெல்லாம் நாமனுபவிக்கவேணும் சற்று சயநித்திரைச்செய்வோம்வாரும்விசனப்படவேண்டாம்அரசே

சக்ரவர்த்தி கனவுகண்டுபுலம்பல்.

இராகம் சங்கராபரணம் விருத்தம்.

கற்பனை யெனுவேவாயின்னங் கலங்குதென் மனமும்மாதே
விற்பன மாகநானும் வேளையிற் றுயிலும்போது
பற்பலச் சோலைசூழும் பரவிய வனத்திற்சென்று
சொற்பனங் கண்டசெய்தி சொல்லுவேன் சரியாய்தானே

இராகம் சங்கராபரணம் ஆதிதாளம்.

பல்லவி.

கண்டேனே பொல்லாக்கனவு-யென்
கண்ணே! பெண்ணே!

அநுபல்லவி.

அண்டலைசூழ்வனத்தில்
நானிவேட்டைக்குபோனதாய் (கண்)

சரணம்.

அங்கொருமான்கலையு மிரண்டுகுட்டிகளுடன்
அந்தக்கலையைநாயுந் துரத்திப்போனதாகவும்
விந்தையாய்மான்குட்டிகள் திரிபோனதாகவும்
விசவேமானின்காலை நாய்கடித்திட்டதாக (கண்)

வசனம்.

ஆ! மாதே இதுயென்னகாலம் யென்னவிபரீதம் ஆ! சிவனே! இந்தபொல்லாதசொற்பனத்தை யோசித்தால் மெய்நியாகயிருக்கின்றதே யென்னசெய்யலாம் ஜெயப்பிரதா.

ஜெயப்பிரதை புலம்பல்.

இராகம் இந்துஸ்தான் கியால் காபி - ஆதி.

ஐயையோசிவனே! இதுவென்னகாலம்
அடியாள்மன மிகவாடுதேபாரும்

அநுபல்லவி.

வையகத்தில்நாங்கள் செய்தவினையென்ன
வழுத்தபிர்மன்தலை யெழுத்தஇன்டயரே.

சரணம்.

கங்குற்பகலற்றவா கயிலையின்வாசா
கழுறும்பரிபூரண கனிவாய்மகேசா
அங்கம்பதருதைதயோ அவனியிற்காரும்
அமலனே! நினையன்றி யில்லைகண்பாரும்.

வசனம்.

ஆ! ஆ!! சிவனே! நின்செயலோ அல்லது நாங்கள் முன் ஜென்னத்திற்செய்த ஊழ்வினையோ நான்முகன் எழுதிய விதியிதுவோ சகிபகவான் மாய்கையோ ஒன்றுந்தெரியவில்லை மனந்துயருதே சம்போ.

சக்ரவர்த்தி ஜெயப்பிரதைக்குச்சொல்

இராகம் யமுனுகல்யாணி ஆதி.

அருமையுள்ளயெந்தன் பெண்ணே!
அழவேண்டாம்நீ மெத்தவாக யென்கண்ணே
வரும்விதிவந்தால் நாம்படவேண்டுமுன்னே
மாதே! யுன்மனந் தேறியிருந்திடயெண்ணே
எலியழுதால்பூனை விடுமோயென்கண்ணே
எல்லாஞ்சகியன்செய் மாய்கைதானே
வலியவிபத்துகள் வரட்டுமென்கண்ணே
மாதே! யுந்தன்கற்பு தவராதேசொன்னேன்.

வசனம்.

பெண்ணே! ஜெயப்பிரதா யேன்சஞ்சலப் படுகிருய் எலியழுதால் பூனை விடுமோ யில்லை மேலும் நமக்கிப்போது வருகிறதெல்லாம் வரட்டும் மாதே! நீமாத்திர முன்கற்புநிலை தவராமல் சகிப்பாயென்கண்ணே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி தன்மந்திரி பிரதானிகளுடன் கொலுவிற்குவந்து சக்ரவர்த்தி இனிசெய்ய ப்போகிற விதங்காண்க.

சக்ரவர்த்தி மந்திரிக்குச்சொல் வசனம்.

மந்திரி இன்றையதினம் இராணுவத்திற்கெல்லா முன்சம் பளமும் பின்னுமாதத்திற் சம்பளமும் சிறையி லிருக்கப்பட் டவர்கட்கும் அந்தணர்கட்கும் தேவாலயங்கட்கு மெனதுக்ஜா னவிலிருக்குந் திரவியங்களையெல்லாமெடுத்து இனாஞ்செய்து விடுமந்திரியே,

மந்திரி சக்ரவர்த்திக்குச்சொல் வசனம்.

தேவரீர் ஆக்யாபிரகாரஞ் செய்துவிடுகிறேன்வேந்தே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் அன்றிரவு சகிபகவான்மாய்கை யால் புரூர்வச்சக்ரவர்த்தி ஜெயப்பிரதையைப் பார்த்து சொல் லுகிறவிதங்காண்க,

சக்ரவர்த்தி ஜெயப்பிரதைக்குசொல் வசனம்.

மாதே ஜெயப்பிரதா இப்போ கிரவுகாலமாகிற படியால் நாமின்னகரைவிட்டு வெளிதேசம் போய்விடலாங் காதலி.

ஜெயப்பிரதை சக்ரவர்த்திக்குசொல்-வசனம்.

நாயகா தாங்கள் பகர்ந்தமொழிக் கெதிர்மொழியுண்டோ தேவரீர் வார்த்தையின்பிரகாரம் அடியாள் நடக்க பிரியமுள்ள வளாக யிருக்கின்றேன்.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி தன்னிர ண்டுபிள்ளைகளையும் பெண்சாதி ஜெயப்பிரதையையும் அவர்க ளினுடையாபரணங்களை கழட்டிவிட்டு பழைய கந்தைகளைக் கட்டிக்கொண்டு அரண்மனையைவிட்டு வெளிவருகிற விதங் காண்க.

சக்ரவர்த்தி ஜெயப்பிரதைக்குசொல்

(போவோம்வாரீர் புகழுங்காசி-யென்றமெட்டு)

வாராய்பெண்ணே ஜெயப்பிரதா
மா! நகரைவிட்டுப்போவோம்
பதியைவிட்டு விதியையெண்ணி
படர்ந்தசோலை வனம்வந்தோம்
மறுதேசம் வந்தோங்கண்ணே
மயங்கவேண்டாம் நடப்பாய்முன்னே

வசனம்.

ஆ! என் பிராணநாயகி ஜெயப்பிரதா பிள்ளைகளின் கால்கள் வலிக்கின்றதோ யென்னமோ நாமென்னசெய்யலாம் நகரைவிட்டு இவ்வளவுதூரம் வந்தோம் கண்ணே.

ஜெயப்பிரதை சக்ரவர்த்திக்குசொல்.

இராகம் நீயகௌளம் விருத்தம்.

ககனமெலாமதிக்கும் கனிவுளபிராணநாத
தகைமையாயிதோபாரிந்த தருணத்திற்காணும்பொல்லா
சகுனத்தையெண்ணும்போது தயங்குதென்மனமுமெந்த
வகையுடன்சற்றுதங்கி மகிபனேபோவோம்நாமே.

இராகம் நீயகௌளம் அடதாளம்.

ஓ! சிவனே இதுயென்னவிபரீதமே
சங்கரனே! சகுனங்களும்பொல்லாதே
மா! அரனே பூனையெதிர்நோக்கலாச்சே
பெரியசாரை பாம்புவலமுங்கட்டுதே
புண்யனே சம்போ இதென்ன
ஏகனே! யெண்ணைகுடமெதிர்தோணுதே
மா! நூகனே மங்கையழுகுரல் காணுதே
நீதனே! நினையன்றிவேறுமில்லையே
ஆதரையினிலிது சரியன்மாய்கையோதெய்வமே
இதென்ன விபரீதமே;
பிராணநாயகா இந்தசகுனம் பார்த்திரா
கருணாகரா இன்னமேதேதுவிசாரமோ
திருகாதலா நாம்தங்கிபோகலாம்நீர்வா

பெருமுலகிலலோர் பணியுமநித்தியதெய்வமே
இதென்ன விபரீதமே.

வசனம்.

நாயகா நாம் நகரைவிட்டு வரும்பொழுதே பூனை யெதிரிடவும் சாரைபாம்பு வலங்கட்டவும் மங்கைப் புலம்பவும் என்ணைகுடமெதிர்வரவும் இப்பொல்லா சகுனங்களை நோக்குங்கால் இன்னம் நமக்கு யென்னென்ன சங்கற்பமோ ஆனால் கொஞ்சந் தங்கிபோகலா மரசே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி பெண்டுபிள்ளைகளுடன் வரும்போது வழியில் சநியன் பிராமணவேடம்பூண்டுவந்து சொல்லுகிற விதங்காண்க.

சநியன்சக்ரவர்த்தியைக்கண்டுசோல்

வசனம்.

ஆ நீங்களார் உங்கள்நாமதேயமென்ன நீங்களெந்தவூர்யெக்கேபோகுதீர்கள் சொல்லுங்கள்

சக்ரவர்த்தி சநியனுக்குசோல்-வசனம்.

ஐயரே போற்றிபோற்றி நாங்கள் பரதேசிகள் பிழைக்கப்போனயிடத்தில் கலகமானபடியால் வேறுபட்டணமாகிலும் போய் ஜீவிக்கலாமெனப் போகிறோம் சுவாமிகளே.

சநியன்சக்ரவர்த்திக்குசோல்-வசனம்.

அந்தோ பரிதாபம் பரிதாப மிந்தசிறிய குழந்தைகளையெடுக்கமாட்டாமல் மிகவும் அயர்ந்துநடக்கின்றீர்களே என்னிடமொருகுழந்தையைக் கொடுங்கள் நீங்கள் நடக்கமாட்டீர்கள் என்பிறகே நடந்துவந்தால் காடு மலை வனாந்திரங்களை யெல்லாங்கடந்து கொண்டுபோய்விடுகிறேன் பரதேசிகளே.

சக்ரவர்த்தி சநியனுக்குசோல்-வசனம்.

தேவரீர் பகர்ந்தவண்ணம் தங்கள்பின் நடந்துவருகிறோம் சுவாமிகளே.

சநியன்சக்ரவர்த்திக்குசோல்-வசனம்.

ஓ! பரதேசிகளே இப்பட்டணத்திற்போய் பிழையுங்கள் நான்போய் வருகிறேன்.

15

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் சக்ரவர்த்தியும் தன் பெண்டு பிள்ளைகளும் மொருநந்தவனத்தைக்கண்டு சற்றுகோபமிளைப்பார வுட்கார்ந்து சக்ரவர்த்தி புலம்புகிற விதங்காண்க

இராகம் முகாரி விருத்தம்.

அணிவள்ரெணதுப்ராண அன்னமேகேளாயிப்போ
நனிவளரினியநாடு நகர்பொருளியாவும்விட்டு
சநியனின்மாய்கையாலே தாணியிழ்விதியையெண்ணி
கனிவளர்வனத்தைவந்தோம் கண்மணிதுயர்கொள்ளாதே

இராகம் பியாகு ஜாவளி ரூபகம்.

வந்தோ மிப்படியே
மா! வுலகிற்பரதேசிகளாக-வந்தோ
வாதா-மலர்பொற்-பாதா-வருட்செய்
நீதா-யெங்கு-மானசிவனே
பிள்ளைகள் முகத்தைநோக்கப்
பெரியசஞ்சலமே
புகழ்-நாதா-மலர்பொற்-பாதா-வருட்செய்
நீதா-யெங்குமான சிவனே
மாதுஜெயப்பிரதை முகம்வாடலாகுதே
மா! நாதா-மலர்பொற்-பாதா-வருட்செய்
நீதா-யெங்குமானசிவனே.
நாடுநகரியாவும் விட்டுவல்வனம்வா
நாதா-மலர்பொற்-பாதா-வருட்செய்
நீதா-யெங்குமான்சிவனே.

வசனம்.

ஆ மாதே யென்னருமை மக்களா நீங்கள் பசியினால்மெத் த அழுவேண்டாம் கடவுள் நம்மை பரதேசிகளாகச் செய்தன ரே யென்ன செய்யலாம் யென்மடிமீது படுத்துக்கொள்ளுங் கள் பிள்ளைகளே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தியும் தன் பெண்டுபிள்ளைகளும் நடக்கச்சக்தியற்றவர்களாய் வழியில்களை

ட்டாட்டு விழுந்திருக்குமளவில் அடுத்தவயலில் அறுப்பறுத்து க்கொண்டிருக்கும் கூலியாளரைப்பார்த்து நவகோடி நாராய ணசெட்டியார் சொல்லுகிற விதங்காண்க.

நவகோடிநாராயணசெட்டிசோல்-வசனம்.

ஆரடா கூலியாளர்களே ஒருவனோடிபோய் பாருங்கள் பாதையில் அன்னியப்பிள்ளைகள் அழுகிறசப்தம் கேழ்க்கிறது சீக்கிரம்போய் பாருங்கள்.

கூலியாளர் செட்டிக்குச்சொல்-வசனம்,

இந்தட்சணமேபோய் பார்த்துவருகிறோம் செட்டியாரே.

கூலியாளர்சக்ரவர்த்திக்குசொல்-வசனம்.

பரதேசிகளே நீங்களார் யெந்தவூர் யெங்கே போகிறீர் கள் சொல்லுங்கள்.

சக்ரவர்த்தி கூலியாளருக்குச்சோல்-வசனம்.

அப்பாதோழர்களே நானோ புரூர்வச்சக்ரவர்த்திபட்டண த்தில் கணக்கெழுதிக்கொண்டிருந்தவன் அங்கு கலகமானப் படியால் யெங்கட்பொருட்களையெல்லாம் தோற்று இப்படிபர தேசிகளாக வந்துவிட்டோம் சோதரர்களே.

கூலியாளர்சக்ரவர்த்திக்குசொல்-வசனம்.

பரதேசிகளே யெங்கள்பின் வாருங்கள் எங்களெஜமானிட மழைத்துப்போகிறோம் உங்களுக் கேதாகிலும் வேலைகொடுப் பார் விசனப்படவேண்டாம் ஏழைகளே.

சக்ரவர்த்திகூலியாளருக்குசொல்-வசனம்.

அப்படியே தங்கள்பின் வருகிறோம் ஏதாகிலும்வேலை கொடுங்கள் தோழர்களே.

கூலியாளர் செட்டிக்குசொல்-வசனம்.

செட்டியாரே இவர்கள் புரூர்வச்சக்ரவர்த்திப் பட்டணத் தில் கணக்கெழுதிகொண்டிருந்தவர்களாம் அங்கு கலகமான ப்படியால் அவர்கள் பொருட்களை யெல்லாம்பரிகொடுத்து இந் தஸ்திதியில் வந்துவிட்டார்களாம் தங்களிடமேதாகிலும் வேலை க்கிடைக்குமென்று அழைந்துவந்தோம் யெஜமானே.

செட்டியார் சக்ரவர்த்திக்குசொல்-வசனம்.

ஓ பரதேசிகளே நீங்களென்னிடம் கூலிவேலை செய்யுங்களப்படிஅரிசியும் கூலியுங் கொடுக்கிறேன் பரதேசிகளே.

சக்ரவர்த்தி செட்டிக்குச்சொல்-வசனம்.

செட்டியாரே அப்படியே தாங்கள் பகர்ந்தவண்ணம் தங்களிட மடியேன் கணக்கெழுதிக்கொண்டு வருகிறேன் இதோ என்பாரியாளையும் கூலிவேலையில் வைத்துக்கொள்ளுங்க ளெஜமானே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் நவகோடிநாராயணசெட்டியார் ஜெயப்பிரஜைதயைக் கண்டமுதல் மதிமயங்கி மோகமேலிட்டு புலம்புகிறவிதங்காண்க.

செட்டியார் ஜெயப்பிரஜைதயைநினைந்து புலம்பல்.

இராகம் - பரஸ் - விருத்தம்.

அன்னமென்கிளியேதேனே அழகுசற்குணமமைந்த
சொன்னமேமலரின்செண்டே சொருசுள்ளகனியேயெந்தன்
கண்மணியெனதுகாமக் கடலேகாலத்தில்வாய்ந்த
உன்னிதஜெயப்ரஜைநீ யுகந்தென்னையணைந்திடாயோ.

இராகம் - பரஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தைதடுமாறுதே மையலினால்
ஜெயப்பிரஜைதயைக்கண்டமுதல்

அநுபல்லவி.

விந்தையோகாணுண்ணும் பழம்பாலும்வேம்பாகுதே
மிகுவழகிகணக்குப் பிள்ளைபாரியின்மீதே சிந்

சரணம்.

காமனதிமோகங் காமரசபாக்கம்
காமன்புண்ர்மோகங் கண்மணியாலேனந்தன் சிந்
சித்தர்தவஞானம் சித்தர்பெருமோனம்
சித்தருறைதானஞ் சுந்தரியவளாலென் சிந்

கொவ்வைகனிவெல்பழமோ குயிலேசெங்கரும்பேவுன்
திங்கள்முகத்தைநோக்கிதியங்கின்றேனடிகண்ணே-சிங்

அன்னநடைஒய்யாரி அரியமலர்வதனி
என்னிடமாகஅவள் வந்துயிணங்குவாளோ சிங்

வசனம்.

ஆ! தெய்வமே என்சிந்தைகலங்குதே இன்னும்பழமும் பாலும் வேம்புபோ லிருக்கிறதே மோகமேலிடுதே யென்ன செய்வேன் அடியென்கண்ணே ஜெயப்பிரதா.

செட்டியார் கூலியாளருக்குசொல்-வசனம்.

என்னூழியக்காரர்களே கணக்குபிள்ளை பெண்சாதியாகிய ஜெயப்பிரதை கூலிவாங்கவந்தால் அவளுடைய படி... பணமும் உள்ளறையில் வைத்திருக்கின்றதெனச்சொல்லி அவ ள்உள்ளேபோனவுடன் கதவைசாத்தி தாள்போட்டுவிடுங்கள் வேலையாட்களே.

கூலியாளர் செட்டிக்குச்சொல்-வசனம்.

அப்படியே அந்தம்மாள் உள்ளேபோனவுடன் கதவ்வசா த்தி தாள்போட்டுவிடுகிறோம் எஜமானே.

பொது - வசனம்.

அகோ தெப்படியென்றால் மறுநாட்காலையில் ஜெயப்பிர தை கூலிவாங்கவந்தபோது நடந்தவிதங்காண்க.

ஜெயப்பிரதை கூலியாளருக்குச்சொல்-வசனம்.

அண்ணமார்களே என்கூலியும் படியரிசியு மெங்கே வை த்திருக்கின்றீர்கள் சொல்லுங்கள் சகோதரர்களே.

கூலியாளர் ஜெயப்பிரதைக்குச்சொல்-வசனம்.

அம்மா வுன்கூலியும் படியரிசியும் செட்டியார் உள்ளறை யில் வைத்திருக்கின்றார் போயெடுத்துக்கொள்ளுந் தாயே.

பெரியகூலிமற்றகூலியாட்களுக்குச்சொல்-வசனம்.

அடே ஓடிவாருங்கள் நம்ப யெஜமாத்தி உள்ளேபோய்விட் டாள் கதவைசாத்தி தாள்போட்டுவிடுவோம் சீக்கிரம்சீக்கிரம்.

ஜெயப்பிரதை யுள்ளேபோய் புலம்பல் கண்ணி.

இராகம் ஆநந்தபைரவி அடதாளம்.

சம்போசிவ சம்போசிவ
சம்போசிவ சிவனே
சடுதியினிற்கதவை சாத்திவிட்டதென்னமாயம்

மாயமோசகியன்செய்த
மாய்கையலதெனமோ
மயங்குதேழை யடியாள்மனம்
வள்ளலென்ன செய்வேன்

எந்தஜென்மமானும் ஐயோ
ஏழைபுத்ர ரிருக்க
ஏனேவித்த வறையிலென்னை
எழிலாயடைத் தனரே

நாடுநகர்விட்டு கூலி
வேலைசெய்ய வந்தும்
நாதா! யுந்தன்செய லென்னமோ
நானுமறிந் திலனே.

வசனம்.

ஆ சிவனே யிதுயென்ன அநியாயம் நாங்கள் நாடு நகரங்களையெல்லாம்விட்டு பரதேசிகளாகவந்தும் கூலிவேலை செய்யவும்விதித்தாய் யென்னை யாதொருகுற்றமில்லாமல் இந்தஅறையில்விட்டு கதவைசாத்தி விட்டார்களே மனம் நடுங்குகின்றதே யேழைபிள்ளைக ளென்னமா யிருக்கின்றார்களோ தெய்வமே.

ஜெயப்பிரதை பிள்ளைகளைநினைந்து-புலம்பல்.

(முத்துச்சாண்டோவாரீரேயென்ற - ஸியால்மெட்)

பல்லவி

அருமைப்பிள்ளைகளு மென்னிட்ட
அரியகணவனு மேதாய்போனரோ தெய்வமே

அநுபல்லவி.

ஒருவருமில்லா வறைதனிலேயோ
உள்ளங்கலங்க யென்னைவிட்டீரே
உம்பர்புகழ்சம்போ சதாசிவனே
சடைக்கண்பாரும் தெய்வமே! (அருமை)

சரணம்.

நின்செயல்தானே நிகழ்த்திடுவேனே
நீண்டவானம்பூமியும் படைத்தவனே
நாதா! இந்தப்பெட்டிக்குள்
நானும்போய்விடுகிறேன் காருந்தெய்வமே! (அருமை)

வசனம்.

கடவுளே! நான்தனியேவந்து மோசம்போனேனே என்னையுஞ் சக்ரவர்த்தியையும் யேழைபிள்ளைகளையும் வேறாக்கி வைத்துவிட்டீர் சிவனே! இந்த அறையைப் பார்க்கும்போது பயங்கரமாயிருக்கின்றதே இந்தபெட்டியைத்தவிர ஒரு வுதவியுமில்லையே தெய்வமே.

ஜெயப்பிரதை பெட்டியைப்பார்த்துசொல்

வசனம்.

[illegible]வு! சம்போ நானிந்த பெட்டிக்குள் போகிறேன் மூடிக்கொள் எனக்[illegible]தலன்வந்து தீண்டினு[illegible]ன் திரக்கவேணும் இப்பெட்டியை அக்கினியில்போட்டாலும் ஜலத்தில் போட்டாலும் ஆயுதங்களினால் பென்னசெய்தப் போதிலு மியசதொரு யிடர் வராமல்படிக்கு அடியாளைக் கார்த்தருளவேணும் சுவ்பரா.

செட்டியார் கூலியாளரைகேட்கும்

வசனம்.

ஆசடா யென்வேலைபாட்களே கணக்குபிள்ளை பெண்சாதி ஜெயப்பிரதை உள்ளேபோயிருக்கின்றாளா.

கூலியாளர் செட்டிக்குச்சொல்-வசனம்.

நீர் ஆக்கியாபித்தவண்ணம் எங்களம்மாளை வுள்ளேவிட்டு கதவைசாத்தி தாள்போட்டுவிட்டோம் எஜமானே.

செட்டியார் கூலியாளருக்குசொல்-வசனம்.

கூலியாளரே அவளெங்கே ஆ! தெய்வமே இவ்வறையிலவளில்லையே யெப்படி வெளியேபோய்விட்டாள் சொல்லுங்கள் அடாகாமாட்டிகளே.

கூலியாளர் செட்டிக்குச்சொல்-வசனம்.

செட்டியாரே அம்மா உள்ளேபோனவுடன் நாங்கள் கதவைசாத்தி தாள்போட்டுவிட்டோம் சிலசமயமிந்த பெட்டிக்குளிருக்கவேணும் யெஜமானே.

செட்டியார் கூலியாளருக்குச்சொல்-வசனம்.

அடா வேலையாட்களே இந்தப்பெட்டியைப் பார்த்தால் வெகுசுந்தரமா யிருக்கின்றது இல்லவேலே என்கண்ணாட்டி ஜெயப்பிரதை இதில்தானிருப்பாள் கமதாசன்தெரிந்தா லென்னை ஆக்கினைசெய்துவிடுவான் நானிந்த பெட்டியை யெடுத்துக்கொண்டு வெளிதேசம்போய்விடுகிறேன் கணக்குபிள்ளைவந்து கேட்டால் அம்மாள் கூலிவாங்க உள்ளேபோனவுடன் வீடுபத்தி யெறிந்துவிட்டது செட்டியார் விசனத்தினால் வெளிதேசம் போய்விட்டாரென்று சொல்லுங்கள் வேலையாட்களே.

கூலியாளர் செட்டிக்குசொல்-வசனம்.

எஜமானே! மெய்மெய் உள்ளதுவன்னபடியே கணக்குபிள்ளைவந்து கேட்டால் சங்கதிகளை வெட்டவெளிச்சமாக சொல்லிவிடுகிறோம் நீர்மாத்திரம் அம்மாளை வேலைசெய்யாமல் பத்திரமாய்ப் பார்த்துவரவேணுந் செட்டியாரே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் நவகோடிநாராயணசெட்டி பெட்டியையெடுத்துக்கொண்டு சமுத்திரத்தில் போட்டுவிடுகிறேனென்று வரும்போது நடக்கும் விதங்காண்க.

பெட்டியிலிருக்கும் ஜெயப்பிரதை செட்டிக்குசொல் வசனம்.

ஓசெட்டியாரே யேன் சமுத்திரத்தில் போடப்போகுதீர் போட்டாலு மும்மைவிடப்போகிறதில்லை யெனக்கொரு நோன்புண்டு அதுமுடிவாக ஏழுநாரவருட்ஞ்செல்லும் அதுவரையில் நான் ஒருவர்முகத்தையும் பார்க்கமாட்டேன் நோன்பு முடிகிறகாலத்தில் பெட்டி தானேதிறக்கும் ஆனதால் கொஞ்சம் நிதானிக்கவேணுந் செட்டியாரே.

செட்டி அம்மாள்மொழியை கேட்டியெனநம்பி-புலம்பல்.

இராகம் பரஸ் ஆதிதாளம்.

ஆ! யெந்தன்குயிலே யுன்மொழிபடியே
ஆசையாய்க் காத்திருப்பேன்
சுந்தரமேனியாளே சொல்லரியமலரே
சந்தோஷமாகயெந்தன் மனமும்தேறிடலாச்சே (ஆ)

செய்தபூஜாபலமோ தேனேயெனக்கமைந்தாய்
மெய்யாகவேவுந்தனை மேன்மையுடன்வைப்பேனே (ஆ)

வசனம்.

என்கட்டிக்கரும்பே ஆசைநாயகமே அபரஞ்சியேயென் மனதுமிகவுஞ் சந்தோஷமானது நான் முந்திசெய்த பூஜாபலமோ நீ யெனக்கிந்த வயதில் கிடைத்தாய் உன்மொழிபோல் எழுவரையுடங்கார்த்திருக்கின்றேன் அடியென்அன்னபேடே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தபிரகாரம் ஜெயப்பிரதைச் சொன்னவார்த்தைகளை நவகோடி நாராயணச்செட்டியார் கேட்டு பெட்டியை பாதுகார்த்து வரும்நாளில் அங்கு பிள்ளைகளை க்கார்த்துவரும் கணக்குபிள்ளையாகிய சக்ரவர்த்திக்கு[illegible]—துபுரத்தி[illegible]டிக்க தன்னிரண்டு பிள்ளைகளைப்பார்த்துப் புலம்புகிற விதங்க[illegible]

சக்ரவர்த்தி தன்சேயரைப்பார்த்து-புலம்பல்

இராகம் - கன்னடா - விருத்தம்.

பூமியோர் விண்ணோரென்றும் புகழுடன்பணிந்து நிற்கு
நேமியே! சம்போதேவே! நிகழ்த்தநின்செயலிதானோ,
ஜாமந்தானென்றுமாச்சே தையல்போனவளைகாணேன்
காமனையெறித்தயீசா பிள்ளைகள்கலங்கின்றாரே

இராகம் கன்னடா ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காணேன் மாதுஜெயப்ரதைஐயோ

அநுபல்லவி.

கண்மணிகளே! நீங்கள் அழவேண்டாமக்களா (இன்)

சரணம்.

நாடுநகர்விட்டு நலமெல்லாமேகுறைந்து
நலிலவேகூலியாளா யிருக்கவிதியும்வந்து
காடமர்ந்தப்பதியில் குடிசையுமிட்டுவாழ்க
கர்த்தன்செயலல்லது சகியனின்மாய்கைதானோ (இன்)
மக்களே! வுங்கள்மாதா கூலிவாங்கப்போனாளே
மடிமேல்பிரண்டுநீங்க ளழவேண்டாம்பாலர்களே

முக்கனியுடனன்னம் வந்துகொடுத்திடுவாள்
முகமதுசோர்வடைய வையாதீரென்புத்ரர்களே. (இன்)

வசனம்.

ஆ! எனதருமையேழைபிள்ளைகளே நீங்களழவேண்டாம் உங்கள்தாயார் அதிசீக்கிரம்வந்து உங்களுக்குமுக்கனியுடன்சாதமிடுவாள் அழவேண்டாம் கண்மணிகளே நாமின்னமேதேது அநுபவிக்கவேண்டுமோ அதை அநுபவிக்கவேணும் புவியின்கண் விதிவிடுமோ வில்லையே மக்களா.

சக்ரவர்த்தி முதற்பிள்ளை சத்தியதருமன்சொல்

வசனம்.

தந்தையே யெங்கள்மாதா இப்போது வருவார்களா யெங்களுக்கு பசிமேலிடுதே ஐயையோ தந்தையே.

சக்ரவர்த்தி ஜெயப்பிரதையைநினைந்துபுலம்பல்.

(எங்கட்குறஜாதியென்ற மார்க்கண்டநாடக மெட்டு)

தெய்வமே! தெய்வமே!! தேறுதலில்லையே
சிந்தைகலங்குதினி யென்செய்குவேன் (ஆ! சம்போ)
கூலிவாங்கபோனவ ளின்னம்வரக்காணேனே
குமருதேயென்மனதுவிதிவந்துமூண்டதோ(ஆ! சிவனே)

ஜாமமொன்றுமாச்சுதே தையல்வரக்காணேனே
தாயைநினைந்துபாலர் தவித்தழுகின்றார்களே

வசனம்.

ஆ! சிவனே ஜெயப்பிரதைபோய் ஒருஜாமமாச்சுதே ஒரு ஆதரவுமில்லையே ஏழைபாலர் பசியினல் தாயைநினைந்து மிகவும் அழுகின்றார்களே யென்னசெய்வேன் யென் தலைவிதியோ தெய்வமே.

பொது-வசனம்.

அசோதெப்படியென்றால் ஜெயப்பிரதை கூலிவாங்கப் போய் வராமையால் சக்ரவர்த்தி தன்னிரண்டு பிள்ளைகளையுமழைத்துக்கொண்டு நவகோடி நாராயணசெட்டியார் வளவிற்குவந்து கேட்கிற விதங்காண்க.

சக்ரவர்த்தி வேலையாட்களைகேட்கும்-வசனம்.

அப்பா வேலையாட்களே என்பெண்சாதி ஜெயப்பிரதை.

கூலிவாங்கவந்து ஒருஜாமமாச்சுதே அவளெங்கே சொல்லுங்களப்பா தோழர்களே.

கூலியாளர் சக்ரவர்த்திக்குசொல்-வசனம்.

ஓய் கணக்குபிள்ளையே கின்காரத்திரம் நேற்று கூலிக்குவராமையால் செட்டியார் அந்தம்மாளுடைய படிஅரிசியும் பணத்தையும் உள்ளேவைத்திருந்தார் அம்மாவந்து வுள்ளேபோயெடுத்துக்கொள்ளுந் சமயத்தில் வீடு அக்கினியினு லெரிந்துவிட்டது செட்டியார் இதுவிஷயத்தைநகருதி விசனத்தினால் வெளிதேசம்போய்விட்டார் கணக்குபிள்ளையே

சக்ரவர்த்தி ஜெயப்பிரைதயைநினைந்துபுலம்பல்

அகவல்.

உலகெலாம்பணியு மூச்சிதபரனே!
இலகுவேயுந்தன் செயலிதுதானோ (ஆ! தேவா)
பிள்ளைகள்ரனைய மெலிந்துபோகாமல்
உள்ளமுங்கதா விட்டுபோயினளோ (சிவனே!)
சிவசிவா அந்தோ யிதுவென்னகாலம்
அலளுமேயெந்தனைவிட்டுதான்பிரிந்தாள்(ஆ!மயேஸ்பா)
எப்படியிந்த சேயர்கள்தனையும்
அப்பனே! யானும் கார்த்திடுவேனோ (தெய்வமே)
நாடுநகர்பொரு ளியாவையும்விட்டு
பேடெயற்மனைவி தனையுமேயிழந்தேனை(ஆ! மருந்துவனே)
சகியனின்மாய்கை தாளேனுமா! சிவனே
இனியானுயிரைவைத் திருப்பதுவீணே

வசனம்.

ஆ! ஆ!! சம்போ ஒருநாளு மென்னைவிட்டுப் பிரியாதவள் பிரிந்துபோகவும் காலமாச்சுதா இந்த சிறியகுழந்தைகளையாகிலும் போகிறவ ளெடுத்துக்கொண்டுபோகாம லென்னிடம்விட்டுபோயினளே தெய்வமே இந்த அறியாதகுழந்தைகளைநான் யெப்படிபாதுகாப்பேன் தேவா.

சேயர்கள் சக்ரவர்த்தியைக்கேட்கும்

வசனம்.

பிதா யெங்களை பத்துமாதஞ்சுமந்துப் பயின்ற மாதாவெங்கே யெவ்விடம்போயிருக்கின்றார்கள் இப்போது வருவார்களா கீரேனமுகின்றீர் தந்தையே.

20 சக்ரவர்த்தி பிள்ளைகளுக்குச்சொல்-புலம்பல்.

(இராஜாதிராஜனடி யென்றவர்ணமெட்)

என்னருமைபிள்ளைகளா யெல்லாம் சிவன்செயலே
அன்னிதமா யுங்கள்தாயா ரக்கினியில் மடிந்தாளாம்
ஐயையோ மக்களா ஐயையோ
அவனிமிசைப் பாவியானேனும்
காலத் தின்மகிமைதானே

பிள்ளைகள்சொல்.

ஐயையோதந்தையரே யெங்கள்தாயாருமெங்கே
மெய்யும்நடுங்குதிப்போ மேதினியிற்பாவியானோம்
விளம்பே தந்தைநீர்விளம்பவே
விமலனின் செயலிதுவோ

சக்ரவர்த்திசொல்.

சுந்தரச்சேயர்களே சொல்லமனஞ்சஞ்சலமே
விந்தைதசகிரீஸ்பரனின் மாய்கைதானடாமக்களா
சோறுதே கடமும்வாடுதேமக்களா
சூழ்வினையின்போல்படியே

பிள்ளைகள்சொல்.

தாயற்றபிள்ளைகளாக தற்பரன்செய்தவிதியோ
காயற்றமரம்போல்நாங்கள் காசினியிலேயிருக்க
கர்த்தனே வுந்தனின் சித்தமோ மகா
கதியற்றபிள்ளைகளானோம்.

சக்ரவர்த்தி பிள்ளைகளுக்குச்சொல்

வசனம்.

என்யேழைமக்களா அழவேண்டாங் கண்மணிகளே நமக்குவருகிறதெல்லாம் வரட்டு மென்னசெய்யலாம்.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச் சக்ரவர்த்திக்கு நவகோடிநாராயணசெட்டி வேலையாட்கள்சொன்ன விஷயத்தைக்கேட்டு இனிபுவியிலிருக்கிறதைவிட நமது பிராணனைபோக்கிக்கொள்ளலாமென்ன தன்னிரண்டு பிள்ளைகளையு மழைத்துவரும்போது சகிபகவான் மாய்கையால் நடக்கும்விதங்காண்க.

சக்ரவர்த்தி அடவியில்வரும்நதியைக்கண்டு புலம்பல்.

ஆகவல்.

மழையுமேபெருகி பெய்யுதே ஆந்தோ
வழியெனக்கொன்றும் புலப்படவில்லையே
மக்களா
ஏனழுகின்றீர் யெங்குசென்மனமும்
வானவர்கோன்செயல் வாய்த்ததிப்படியே
ஆறிதோதோண அதிலுமேவெள்ளம்
மீறியேவருகு தினியென்னசெய்வேன்
(ஆற்றில்வெள்ளம்பெருகுதே)
மாநிலமீது சநியனின்செயலோ
மக்களேநீங்கள் பயப்படவேண்டாம்

வசனம்.

ஆ! சம்போ மழையும்அதிகமாய்ப் பெய்யுதே இடிமின்னல்களுந்தோணுதே வழியுஞ்சரியாகயில்லையே தெய்வமே இந்தக்காட்டாரில் இறங்கிபோகவேணுமென்றலோ வெள்ளமதிகமாய்ப்போகுதே யென்னசெய்வேன் என்கண்மணியாகிய யேழைமக்களா நீங்களழவேண்டாம் பயப்படாதிர்கள்,

சக்ரவர்த்தி ஆற்றங்கரையில்வந்து புலம்பல்.

இராகம் இந்துஸ்தான் காபி கஸல்.

பாலர்களே ஏனழுகின்றீர்
பயப்பட வேண்டாமேயென் (பால)
உலகில்விதி விடுமோயில்லையே
உள்ளமுங்கதரயெந்தன் (பால)
வானம்பூமி யாவும்படைத்த
மகிபன்தனை நம்புவீரென் (பால)

வசனம்.

மகனே அழவேண்டாம் இந்த கொடியினுலுன்னைக் கட்டிவிட்டு உன்தம்பி தருமசீலனை யெடுத்துக்கொண்டு அக்கரைவிட்டு மறுபடியு முன்னைவந் தெடுத்துபோகிறேன் மகனேசந்தியதரா.

21 போது வசனம்.

அகோ தெப்படி [illegible] ஷல் புரூர்வச்சக்ரவர்த்தி முகற்பிள்ளையைக் கொடியினுல் [illegible] இளையபிள்ளையை [illegible] துக்கொண் டாற்றிலிறங் விதங்காண்க.

சக்ரவர்த்தி ஆற்றில்வரும்வெள்ளத்தைப்பார்த்துச் சோல்

இராகம் நாதநாமகிரி விருத்தம்.

மனமிகதுயருதங்தோ மகிபனேகருணைக்குன்றே!
தினமுமேஅமரர்போற்றுஞ் செம்மலேநித்யவாழ்வே!
துணையுனையன்றிவேறு மில்லையேயடிமைக்கிப்போ
கனமுடனாற்றில்வெள்ளம் பெருகுதேகார்த்திடுமே.

இராகம் நாதநாமகிரி திரிபுடை.

பல்லவி.

தெய்வமே இனியென்செய்வேனேழை
சிந்தை கலங்குதையையோ மா!

அநுபல்லவி.

வையமிசை மாதுஜோய்
பிரதைப்பு மடிந்திட்டாளே (தெய்)

சரணம்.

ஆற்றில் வெள்ளம் பெருகுதே
அழவேண்டாங் கண்மணிகளே
தூக்கிக்கொண்டு போறேன்மக்களா
செல்வசத்திய தாராயிங்கிரு (தெய்)

வசனம்.

என்கண்ணே சத்தியதாரா அழவேண்டாம் சீக்கிறம் வந்துன்னையெடுத்துப்போகிறேன் பாலகா

சக்ரவர்த்தி நதியிலிறங்கிபுலம்பல்.

இராகம் பைரவிஜாவளி அடதாளம்

ஐயையோ தெய்வமேநானென்னசெய்குவேன்
ஆற்றில்பெருவெள்ளம் வருகுதேதானே
சகியனின்மாய்கை யோ
சம்போசங்கர தேவா
தர்க்காத்தருளென ஈஸ்பரனே.

பாலகா தருமசீலனே மெத்தப்
பயப்படவேண்டாமென் கண்மணியே-நீ
பகரவேயிக்கரை வந்தோமிப்போதே
தர்க்காத்தருளெமை ஈஸ்பரனே.

எதிதுமாயம் யென்னவபாயம்
எல்லாம்நின்செயலே இயம்பிடப்போதும்
எந்தையே! சம்போசதாசிவதேவனே
தர்க்காத்தருளெமை ஈஸ்பரனே.

வசனம்.

[illegible] பயப்படாதே இதோ யிக்கரை வந்துவிட்டோம் நீயிங்குதானிரு நான்போய் அக்கரையிலிருக்கு முனதண்ணனை அதிசீக்கிரமெடுத்துக்கொண்டு வருகிறேன் கண்மணியே.

தருமசீலன் சக்ரவர்த்திக்குசோல்-வசனம்.

என் அண்ணனை அதிசீக்கிர மெடுத்துவாருந் தந்தையே.

பொது - வசனம்.

அகோதெப்படியென்றால் சக்ரவர்த்தி தன் முதற்பிள்ளையை கட்கொடியென்னுங் கொடியினால் கட்டிவிட்டு இளையபிள்ளையை அக்கரையில்விட்டு மறுபடியு முதற்பிள்ளையை யெடுக்கவரும்போது காட்டாருவெள்ளத்தி லடித்துக்கொண்டுபோகிற விதங்காண்க.

சக்ரவர்த்திஆற்றுவெள்ளத்தில்அடித்துப்போகும்போதுபுலம்பல்.

(இராஜாலுமைகெளமகாயென்ற இந்திரசபாமெட்.)

நானென்னசெய்ய போகுறேன்
நடாற்றில் போறேன்
நாதனேயென் பிள்ளைகளுக்காதரவில்லையே

பிள்ளைகள்சக்ரவர்த்திக்குசோல்-வசனம்.

பிதாவே இந்தசிறியபாலர்களை கரையில்விட்டு வெள்ளத்தில்போகுறீரே ஐயையோ அநாதிபிள்ளைகளானோமேசிவமே.

சக்ரவர்த்தி-புலம்பல்.

கொடியினால்இரண்டுப் பிள்ளையைக்
கட்டிவிட்டேனே
குமருதெந்தன் மனந்தானே
கோமானே கண்பார்

வெள்ளங்கொண் டென்னைப்போகுதே
வேதன்விதி யிதுவோ
விளம்பவே சநியன்மாய்கையோ
வேறென்ன ஆதோ.

வசனம்.

சிவசிவா கயிலாசவாசா பார்வதிசமேதா காலகண்டதிரிநேத்ரா யென்யேழை பிள்ளைக ளுமதடைக்கலமே சம்போ.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் ஆற்றங்கரையில் கொடியிலும் கட்டிருக்தப் பிள்ளைகள் அழுதுகொண்டிருக்கும்போது செய்கவப்புரத் திடைச்சி செங்கமலமென்பவள்வந்து ஆட்பாலரை அழைத்துபோகிறவிதங்காண்க.

செங்கமலமிடச்சிவருகிற-தரு.

(தாக்கவாலே ஓரலவி யென்றதாத்ராமெட்)

இடச்சிநான்தானே செங்கம
லென்பவள் நான்தானே-இடச்சி

ஆயர்பாடி ஆயர்பாடி ஆயர்பாடியில்
செங்கம லென்பவள் நான்தானே. (இடச்சி)

வசனம்.

ஆ! என் கட்டிக்கரும்பே நீயேனழுகின்றாய் உன்னையாரிக்கொடியிலும் கட்டினதுமகனே.

சக்ரவர்த்தி முதற்பிள்ளைசொல்

இராகம் முகாரி விருத்தம்.

அம்மணியெம்மைப்பெற்ற அன்னையுமில்லைஐயோ
அம்மணியெமைவளர்த்த அருமையெம்தந்தைதானும்
அம்மணியிக்தஆற்று வெள்ளத்தில்மூழ்கிபோனார்
அம்மணிபாலர்க்காரு மில்லையே அழுகின்றோமே.

வசனம்.

அம்மணி நாங்கள்பரதேசிபிள்ளைகள் எங்கள் தகப்பனை இத்தக் காட்டாறுவெள்ளத்தி லடித்துக்கொண்டு போய்விட்டதுமாதாவே.

செங்கமலமிடச்சிசொல்-வசனம்.

அப்பா யென்கண்மணியே எனதுவீட்டிற்குவாரும் அழவேண்டாம்.

பிள்ளை யிடச்சிக்குசோல்-வசனம்.

தாயே தங்கள்வளவிற்கு நான்வருகிறேன் அம்மணி.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் செங்கமலயிடச்சி ஆற்[illegible]ரையிலிருக்கும் இளையப்பிள்ளையை யெடுத்துக்கொண்டு போகிறவிதங்காண்க.

இடச்சிஇரண்டாவதுபிள்ளைக்குசோல்-வசனம்.

ஆ! தெய்வமே! இதுயென்ன ஆச்சரியம் இக்கரையிலொருபிள்ளை யழுகிறதே. இவனே யென்கண்மணிகளே கூடவாருங்கள்.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி ஆற்றுவெள்ளத்தில் மிதந்துக்கொண்டுவரும்போது செய்தவப்புரத்திடையர்கள்[illegible]ண்டு யெடுக்கிறவிதங்காண்க.

சேய்தவப்புரத்திடையர்கள்சோல்-வசனம்.

அடே அடே அண்ணே நஞ்சப்பக்கோனான் பஞ்சப்பக்கோனான் இராகவக்கோனான் எல்லாருமோடிவாருங்கள் ஆற்றில் ஆரோஒருவன் வெள்ளத்தில் மிதந்துக்கொண்டு போகிறான் ஐயோபரிதாபம் வாருங்கள் கரையிலெடுத்துப் போடலாம் கோனார்களே.

இடையர்கள் சக்ரவர்த்தியை யெடுக்கும்போதுசோல் வசனம்.

அடே இவனையெடுங்கள் மெத்தபரிதாபம் குளிரினால்வாடுகிறான் கோனார்களே,

இடையர்கள் சக்ரவர்த்தியைக்கேட்கும்-வசனம்.

அடே ஆரங்காணும் உன்னூரென்ன பேரென்ன யெப்படியிந்தவெள்ளத்தில் வந்துவிட்டாய் சொல்லடா.

சக்ரவர்த்தி இடையருகளுக்குச்சோல்-புலம்பல்.

இராகம் சங்கராபரணம் விருத்தம்.

ஒப்பிலாஅண்ணமாரென் உள்ளமுங்கலங்குதிப்போ
இப்படிவந்தசெய்தி யேழையான்பகர்வேன்கேளும்
தப்பிதமாகவோர டில்லையால்மிதந்துவந்தேன்
அப்பாயென்பேரானந்தக் கோனானதானதிருவீரே.

இராகம் சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி.

நானேயாதவக்குலம்
என்பேரானந்தக்கோனன்
நவிலுவேன்சோதரரே

அநுபல்லவி.

கானகத்திலாடுகள் மேய்த்திருந்தவனானே
காட்டாறுவெள்ளமதி லாடொன்றுவந்திட்டதே (நா)

சரணம்.

அதைதேடவந்துவிந்த ஆற்றில்மிதந்துவந்தேன்
ஆருமற்றவனானே வுங்களடைக்கலமே
விதனமுமேலிடுதே விளம்பமனம்வல்லையே
விமலன்செயல்படியே நடக்கும்புவியில்மெய்யே. (நா)

வசனம்.

கோனார்களே நானொரு இடையருக்கு ஆடுகள்மேய்த்திருந்தேன் அதிலொரு ஆடு வழிதப்பிவந்துவிட்டது அதைதேடிவரும்போது ஆற்றுவெள்ளத்தி லகப்பட்டு இந்த ஸ்திதியில் வந்தேன் என்பேர் ஆனந்தக்கோனன் சோதரர்களே.

இடையர்கள் சக்ரவர்த்திக்குச்சொல்-வசனம்.

ஓய் ஆனந்தக்கோனனே ஆற்றில்போகிற வுன்னை கரையிலெடுத்துவிட்டோம் யெங்களுக்கு ஆடாவது குட்டியாவது மேய்த்தால் உனக்கு அன்னங்கொடுக்கிறோம் சம்மதியா சொல்லுங்காணும் ஆனந்தக்கோனனே.

சக்ரவர்த்தி இடையர்களுக்குசொல்-புலம்பல்.

இராகம் காம்போதி ஆதிதாளம்.

பல்லவி.

சம்மதியே நல்லக்கோனார்களே-இந்த
கருணைத்திலாண்டருள்வீர்

அநுபல்லவி.

உம்மையன்றியெனக் கோருற்றதுணையுமில்லை
உலகில்தந்தைதாய்குரு தெய்வமெனநம்பினேன் (சம்)

சரணம்.

ஆருமற்றவனானே ஆற்றில்வந்துவிட்டேனே
அடைக்கலமாகவுங்க ளடிமையுமானேனே

கூறுமொழியதைபோ லாடுமேய்த்திருப்பேனே
கோனர்களே அன்னங் கொடுத்தால்சாப்பிடுவேனே

வசனம்.

கோனர்களே வுங்கள்உத்திரவின்பிரகாரம் அடிமை ஆடு மேய்த்துவருகிறேன் அன்னங்கொடுத்துக் காப்பாற்றவேணும் தோழர்களே.

இடையர்கள் சக்ரவர்த்திக்குசோல்-வசனம்.

அடே ஆனந்தக்கோனே இதோ இந்தக் கம்பளியைக் கட்டிக்கொள் தடியைவைத்துக்கொண்டு ஆடுகள்மேய்த்திருங்காணும் கம்புகளியுமோருங் கொண்டுவந்துகொடுக்கின்றோம் ஆனந்தக்கோனே.

சக்ரவர்த்தி இடையர்களுக்குசோல்

வசனம்.

அடிமை தங்கள்சொற்பிரகாரம் ஆடுகள்மேய்த்து வருகிறேன் கோனர்களே.

சக்ரவர்த்தி ஆடுகள்மேய்க்கும்போது-புலம்பல்.

இராகம் - சங்கராபரணம் - விருத்தம்.

பாருளோர்துதிக்குஞானப் பரமனேகருணைக்குன்றே!
ஆருதவியில்லையிப்போ தடிமையைக்காக்கவேணும்
சீருளதெனதுபெண்டு சிறுவரைப்பரிகொடுத்தும்
ஏருளகாட்டிடைஆடு மேய்க்கவேயென்னகாலம்.

இராகம் சங்கராபரணம் கண்ணி.

என்னகாலம் வாய்த்துதே மா! சிவனே
எளியவன்பெண்டு பிள்ளைகளைவிட்டு
இந்த அடவியிலாடுகள் மேய்க்கநான் (என்)

கம்பளிநான்கட்டிடவுமாச்சே
கையில்தடிகொண்டு கானகத்திலாடு
கர்த்தனே நான் மேய்க்கவைத்தீரேஐயையோ (என்)

சநிபகவான்செய லிதுவோ வடியேன்
சங்கராசம்போசதா சிவபீஸ்பரா
தரணியிலேழையைக் கைவிடாதாள்வீரே. (என்)

வசனம்.

தெய்வமே! கம்பளிக்கட்டவும் அடிமை தடிபிடித்து ஆடுகள்மேய்க்கவும் நின்சோதனையா அல்லது சநிபகவான் மாய்கையோ யேழையைப்பாதுகார்க்கவேணும் சம்போ.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூரவச்சக்ரவர்த்தி அடவியி லா[illegible]கள் மேய்த்துவரும்நாளில் ஒருநாள் கௌளிச்சொல்ல அச்[illegible]த்தி யதைக்கருதிப் புலம்புகிறவிதங்காண்க.

{ சக்ரவர்த்தி கௌளிசொன்னதை நினைந்து புலம்பல். }

(ஐலோமத்திடாரி அங்கணவா-யென்றமெட்)

ஐயோதெய்வமே இதுயென்னகாலம்
அன்பாகப்பலுக்குதே கௌளியின்னேரம்

காடுநக ரியாவையும்மிழந்தும்
நாதனே! யென் பெண்டுப்பாலரையிழந்தும் (ஐ)

கௌளிகுறியைக் கருதிடமெத்தக்
கெடுதிகள்வரும்போ லிருக்குதேசம்[illegible]. (ஐ)

வசனம்.

ஆசிவனே இந்தகௌளிசொன்ன விஷயத்தைப் பார்த்தால்யெனக்கேதோ கெடுதிகள்வரும்போ லிருக்கின்றதே காடுநகர் பெண்டு பிள்ளைகளும்போயின்னமென்னென்ன சங்கற்பமோதெய்வமே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் புரூரவச்சக்ரவர்த்தி கௌளிசொன்ன விஷயத்தைநினைந்து புலம்பி சங்கொத்தைத் தலையணையாகவைத்துக்கொண்டு நித்திரைசெய்யும்வேளையில் சநிபகவான் செய்கிறவிதங்காண்க.

சநிபகவான்சொல்-வசனம்.

ஆ! பாருங்கள் சபையோர்களே நானேசநியன் நானெப்படியாகிலு மந்தசக்ரவர்த்தியைத் திருடனாகச்செய்து ஒரு கைப்[illegible]காலையும் வாங்காமற்போனால் என்பேர்சநியனல்ல இந்தட்சணமே செய்கிறேன் பாருங்கள் சபையோர்களே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் சநிபகவான் செய்தவப்புரத்து அரண்மனைக்குட்சென்று அந்தபுரத்தில்நித்திரைசெய்யும் நிலர்தவதியாளின் அபரஞ்சிபெட்டியை யெடுத்துவந்து நித்திரைசெய்திருக்கும் புரூரவச்சக்ரவர்த்தி தலையண்டை வைத்துப்போனபின் நடக்கும்விதங்காண்க.

திலர்தவதியாள்-புலம்பல்.

இராகம் பியாகு விருத்தம்.

நாயகாநாமும்நித்திரை நலமுடன்செய்யும்போதுஉ
பாயமாயிங்குகள்ளன் பக்குவமாகவந்து
நேயமாயெனதுதிவ்ய நிறைநகைபெட்டிதன்னை
சாயலாயெடுத்துபோனான் க்ஷணத்தினிற்பிடித்திடுவீர்.

இராகம் ப்யாகு ஜாவளி ரூபகம்.

பல்லவி.

அரசே கள்ளன்வந்து போனான்
அறிவீரிந்த அரைக்குள்ளே

ஏந்தலே! யென்னுமனிங்கு
எப்படிவந்தானோபோது
அந்த அபரஞ்சிபெட்டி
ஐயோ யில்லையேநீர்பாரு (அரசே)
மனதுவி ரியங்கொண்டு
வந்தகள்ளனை யிப்போது
க்ஷணத்தினி லேபிடித்து
தரவேணு மெனரசே. (அரசே)

வசனம்.

பிராணநாயகா நாம் நித்திரைச்செய்யும்போது ஒருகள்ளன்வந்து யென்னுடைய நகைபெட்டியை யெடுத்துக்கொண்டு போய்விட்டான் அரசே.

செய்தவப்புரத்தரசன்சொல்

இராகம் இந்துஸ்தான் - தோடி விருத்தம்.

கண்மணியெனதுசந்த்ரக் காதலியழுகவேண்டாம்
அன்னமேகள்ளன்வந்துன் னபரஞ்சிபெட்டிதன்னை
பின்னமாயெடுத்துபோனான் பெரிதலக்ஷணத்திலானும்
திண்ணமே! பிடித்துவந்து சிறையிடுவேனேமானே.

இராகம் - இந்துஸ்தான் - தோடி - ஆதி.

சரியோ யெந்தன்கண்ணே
சஞ்சலப்பட சரியோ

பெரிதல்ல நானவனைப்
பிடித்து சிறைசெய்குவேன்
பெண்ணே மனங்கலங்கி
பெரிதாகவே இப்போது (சரியோ)

மனதாசரியங்கொண்டு
வந்தக்கள்ளனைப்போது
அன்னமேபிடித்துச்சிறைசெய்கிறேன்
அஞ்சவே வேண்டாம். (சரியோ)

வசனம்.

ஆ! யென்பிரியகாதலி நீயழவேண்டாம் இவ்வளவுதயிரியமாக நம்முடைய படுக்கரையில்வந்து அபரஞ்சி பெட்டியைக் களவுசெய்துபோன திருடனை உடனேபிடித்து சிறையில்வைக்கிறேன் நீ மனங்கலங்காதே மாதே.

அரசன் மந்திரிக்குச்சோல்-வசனம்.

மந்திரி எனதரையில் கள்ளர்கள்வந்து அபரஞ்சிபெட்டியை களவுசெய்துப்போனார்கள் ஆகையாலுடனே பிடித்துவர இட்டஞ்செய்வீர் மந்திரியே,

மந்திரி அரசனுக்குச்சோல்-வசனம்.

இந்தட்சணமே கள்ளர்களை பிடித்துவர உத்திரவு செய்கிறேன் அரசே.

115655

மந்திரி காவலர்களுக்குச்சோல்-வசனம்.

ஆரடா காவலர்களே நமதரசன் படுக்கரையிலிருந்த ரத்னபெட்டியை திருடர்கள் களவுசெய்துப்போனார்கள் ஆனதால்கள்ளர்களை பிடித்துவந்தாலாச்சுது இல்லாவிடில் அரசனுங்களுக்கு ஆக்கினைவிதிப்பார் காவலர்களே.

காவலர்கள் மந்திரிக்குச்சோல்-வசனம்.

களவுசசெய்துபோன திருடர்களை இந்தட்சணமே பிடித்துவருகிறோம் மந்திரியே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் காவலர்கள் கள்ளன்போனகாலடியைப்பார்த்துவரும்போது நடக்கும்விதங்காண்க.

காவலர்கள் சக்ரவர்த்தியைப்பார்த்துச்சோல்

வசனம்.

அடாகுண்டா அடாமிண்டா அடாசண்டா அதோபார் அதோபாருங்கள் நமதரசியின் நகைபெட்டியை அந்த இடையன் தலையண்டையில்வைத்து படுத்திருக்கின்றான் பார்த்தீர்களா ஓடிவாருங்கள் தோழர்களே.

காவலர்கள் சக்ரவர்த்திக்குச்சொல்-வசனம்.

ஆரடா திருட்டுபயலே வெகுயோச்கியனைபோல் நித்திரைசெய்கிறாய் யெழுந்திரும்படவா அடே இவனைகட்டுங்கள் பிடியுங்கள் உதையுங்கள் ஜல்திஜல்தி அரசனிடங் கொண்டு போகலாம் மித்திரர்களே.

சக்ரவர்த்தி புலம்பல்.

இராகம் முகாரி விருத்தம்

உள்ளமும்பதருதையோ வுலகினிலென்னையிப்போ
கள்ளனாகவுமேசெய்தக் காரணமென்னஐயோ
விள்ளவேவகையொன்றில்லை விதிவந்துமூண்டதோதான்
பிள்ளையான்செய்ததென்னப் பிழையுமொன்றில்லைதேவே

(ஆரணத்தில்வோராசன்-யென்றமெட்)

மனமுந்திமாறிப் போகுதென்னசெய்குவேன்
வள்ளலே! நின்செயலல்லதுசரியன்மாய்கையோ (மன)
ஆ சம்போ

சினமுடனே கள்ளனாகச் செய்தீரேமுன்னே
சிறியேனென் றாஞ்செய்ததியேன் ஊழ்வினைபயனோ (மன)
ஆ சம்போ

விண்ணவர்களனுதினமும் பணியும்நாதனே (மன)
வேறுதவியில்லையிந்த வேளையில்தானே
ஆ கடவுளே.

வசனம்.

ஐயையோயென்று முன்ஜென்மத்தில்செய்த ஊழ்வினையோ இப்போதடிமை யொருகுற்றமுஞ் செய்யவில்லையே மனம்நடுங்குகின்றதே சம்போ.

காவலர்கள் சக்ரவர்த்திக்குசொல்-வசனம்.

அடா திருடா உன்தலைமீ திப்பெட்டியை வைத்துக்கொண்டு நடக்காணும்.

சக்ரவர்த்தி காவலர்களுக்குசொல்-வசனம்.

காவலர்களே உங்கள்சொற்பிரகாரம் அடிமைபெட்டியை யெடுத்துக்கொண்டு வருகிறேன் யென்னை அடிக்க வேண்டாம் காவலர்களே.

௨௮ சக்ரவர்த்தி புலம்பல்.

(கரமேஆயாமேராகந்தஜீக்கதானு-யென்றமெட்டு)

மனமுந்தடுமாறிப் போகுதேதானே
மண்மீதிலடியுவன் விதிபயனிதுவோ (சிவனே)
விண்ணவர்பணிந்திடும் விமலனேரேனே
வேளையிலெந்தனை யாண்டருள்தானே (கருணைகர்னே)
கொலையாளனென்னைக் கட்டியடிக்க
குவலயத்திற்சநி பகவான்சேர்ந்தனையோ. (ஆதெய்வமே)

வசனம்.

ஆ! தெய்வமே யென்னை கள்ளனாகவுஞ் செய்துவிட்டீர் இனி யென்னசெய்யபோகிறேன் எல்லாம்நின்செயலே யென்னைகாப்பாற்றவேணு மையனே.

காவலர்கள் செய்தவப்புரத்தரசனுக்குச்சொல்

வசனம்.

அரசே நாங்கள் கள்ளனைத்தேடிக்கொண்டு போகும்போது இவனொரு இடையனைப்போல் நகைபெட்டியை தலைபண்டையில் வைத்துக்கொண்டு நித்திரைசெய்திருந்தான் பிடித்து வந்தோம் வேந்தே.

செய்தவப்புரத்தரசன் சபையோருக்குச்சொல்

வசனம்.

மந்திரிபிரதானி சபையோர்களே இவனைப்பார்த்தால் மெத்தபோக்கியனும் இராஜலக்ஷணத்தை யுடையவனுமாக யிருக்கின்றான் இவனென்னுடைய ஆபரணபெட்டியை திருடியிருப்பானு சிலசமயங் காவலர்கள் திருடனகப்படாமல் போனதாலிந்தயேழைஇடையனை பிடித்துவந்திருப்பார்களா சொல்லுங்கள் மந்திரிகளே.

செய்தவப்புரத்தரசன் சக்ரவர்த்திக்குச்சொல்

வசனம்.

அடா திருடா என்னுடைய அரண்மனையில் கன்னம்வைத்து அபரஞ்சி பெட்டியை திருடினவ னீதானு யேதாகிலும் அனுமானமிருந்தால் சொல்லடா.

சக்ரவர்த்தி அரசனுக்குச்சொல்

அகவல்.

திருபுவியாளுஞ் செம்மலேசொல்வேன்
பொருளுமேயென்சரி மிருப்பதினாலே

களவுமேசெய்தக் கள்ளனுமியானே
வள்ளலே! யுன்பேர சபைபடிநடத்தே.

வசனம்.

அரசே கையில் பொருளிருக்கிறபடியால் நான்தான்நகை பெட்டியை திருடினவன் தங்களுக்கு தோன்றியபிரகாரம் தீர்மானஞ்செய்யுங்கள் வேந்தே.

செய்தவப்புரத்தரசன் சபையோருக்குச்சொல்

வசனம்.

சபையோர்களே நம்முடையபேரி லியாதொரு நிந்தை யுஞ்சொல்லாமல் இந்தகள்ளனுக்கு யென்ன திர்மானஞ் செய்கிறது சொல்லுங்கள் சாஸ்திரிகளே.

மந்திரிஅரசனுக்குச்சொல்-வசனம்.

வேந்தே! தருமசாஸ்திரத்தின்பிரகாரம் தாங்களவனை ஆக்கினை செய்ய வேண்டியதே.

செய்தவப்புரத்தரசன் கொலையாளர்கட்குச்சொல்

வசனம்.

அடா கொலையாளர்களே நீங்களிந்தத் திருடனை கொலை செய்கிற விடத்திற்கு கொண்டுபோய் அஸ்தமிக்கின்றதருணத்தில் இவனுடைய மார்கை மார்காலையும் துண்டித்துப்போட்டு வாருங்கள் கொலையாளர்களே.

காவலர்கள் அரசனுக்குச்சொல்-வசனம்.

இந்தட்சணமே இந்தத்திருடனுடைய கரமுங் காலையும் வெட்டிவிடுகிறோம் அரசே.

சக்ரவர்த்தி புலம்பல்.

இராகம் காம்போதி விருத்தம்.

தெய்வமே! யென்னசெய்வேன் சிந்தையுங்கலங்குதிப்போ
தெய்வமே! நின்னையன்றி திதியனுங்கொருவரில்லை
தெய்வமே! கள்ளனைச் செய்துமென்கரங்கால்வாங்க
தெய்வமே! செய்தவிதல்லால் இருவினைபாட்டோசொல்லே.

(பாரோரங்கா பாசிரங்கா-யென்றமெட்)

சம்போசிவ சங்கரனே!
தரணியிலென்னை கள்ளனகச்
செய்தீ ரேசிவனே.

கருணாகரனே கர்த்திபனே
கரமுங்காலை வெட்டதானே
செய்தீரே சிவனே.

பெருமானேகங்கை தரித்தவனே
பெண்பிள்ளை அலையதானே
செய்தீரே சிவனே.

வசனம்.

ஐயையோ தெய்வமே! தெய்வமே! என்னசெய்வேன்.

கொலையாளர்சொல்-வசனம்.

அடேகுண்டா நீயிவன் கையைப்பிடித்துக்கொள் அடே சண்டா இங்கேவாடா நீயிவன் காலைபிடித்துக்கொள் ஓமேது ண்டாய் வெட்டுகிறேன் பாரடாதிருடா நீயுன் கண்ணைமூடிக் கொள் படவா.

சக்ரவர்த்தி புலம்பல்.

இராகம் பியாகு விருத்தம்.

ஐயையோயென்னசெய்வே னடிமையின்கரமுங்காலும்
ஐயையோபோனபின்பு அதிகமாய்வலிக்குதிப்போ
ஐயோயென்பிராணன்போக வில்லையேஅமரர்போற்றும்
ஐயனின்கழலைக்கோறி யடைக்கலமானேன்தேவே.

(சம்போசதாசிவயென்ற அரிச்சந்திரநாடகமெட்டு)

தேவாதிதேவனே திகழ்பார்வதிசமேதா
சிறியேனை கைவிடாதே
ஆ! கடவுளே
காவலன்சொற்படி கொலையாளரென்கைகால்
கர்த்தனே வெட்டினரே
ஆ! சம்போ
அருமையுள்ளஜெயப் பிரஜையும்பிள்ளைகள்
ஐயையோமடிந்தார்களோ
என்பெண்சாதிபிள்ளைக ளிறந்துவிட்டார்களோ
கள்ளனுக்குச்செய்[illegible]யிப்படிவைத்தீரே
கலங்குதே [illegible]ன்மனது
ஈஸ்பராயென்ன செய்வேன்

நோகுதேயென்கரங் காலில்ரெத்தும்வா
நிமலனேயென் செய்குவேன்
காப்பாற்றவேணுந் தந்தையே.

பொது-வசனம்.

அஹோதெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்திக்கு மார்கை மார்கால் வாங்கினவுடன் சக்ரவர்த்தி புலம்பிக்கொண்டிருக்கும்போது சரஸ்பதியம்மன் ஒரு மூக்கிரிச்சியைப்போல் வேடம்பூண்டு வருகிறவிதங்காண்க.

சரஸ்பதிசக்ரவர்த்திக்குச்சொல்

(நின் னுநம்பிரா னு-யென்றஜாவளிமெட்)

பல்லவி.

அழவேண்டாமப்பா
அரனின்செயலே

அநுபல்லவி.

பழமும்யெண்ணெயுங் கொண்டுவந்தேன்போதே (அழ)

சரணம்.

கொண்டுவந்தேனன்னத்
கோமானே! நீருண்பீர்
அண்டர்பணிந்தேற்றும்
அண்ணலைதுதிப்பாய். (அழ)

வசனம்.

பாலகா அழவேண்டா மூலகில்வருகிறதெல்லா மந்த சிவப்பெருமான்செயலே இதோயிந்த யெண்ணெயும் பூசுகிறேன் எலுமிச்சங்கனியின்ரசமும் போடுகிறேன் பயப்படாதே இந்த அன்னத்தை பொசியுமகனே.

சக்ரவர்த்தி சரஸ்பதிக்குச்சொல்-வசனம்.

மாதா போற்றிபோற்றி இன்னமியான் உலகில்வாழவேனுமோ யெனக்கின்னு மூபிற்போகவில்லையே என்னசெய்வேனம்மணி.

சரஸ்பதி சக்ரவர்த்திக்குச்சொல்-வசனம்.

பாலகா நான்தான்சரஸ்பதி யுன்மாதாஉனக்கு வேண்டியதெல்லாந்தருகிறேன் மேலுமுலகில் விதிதப்பாது சநிபகவான்

மாய்கையன்றி வேறில்லை கூடியசிக்கிற முனது கையுங்காலும் வளரு மின்னஞ் சிறிதுகாரணம் நடக்கப்போகின்றதுமகனே.

சக்ரவர்த்திசரஸ்பதிக்குச்சோல்-வசனம்.

மாதா தாங்கள்பகர்ந்தவண்ணம்அடிமை அன்னம்போசிக்கிறேன் என்றாலு மடிமைக்கு உலோகதரிசனை யுஞ் சிவதரிசனையுமென்றும் வந்தருள தாங்களனுக்கிரகஞ் செய்யவேணும்அம்மணியே.

சரஸ்பதி சக்ரவர்த்திக்குச்சோல்

இராகம் சங்கராபரணம் திரிபுடை

பல்லவி.

ஆசீர்தந்தேன் ஆ! யென்மகனே
அநவரத முனக்கு

அநுபல்லவி.

ஈச்சுரனருளுமோக்க
இன்பமுடனே வைபோக (ஆசீர்)

சரணம்.

ஆதரையிலோங்கிவாழ
அரனுமையருட்பெற
சீதமுகவள்ளலே! யுன்
திவ்யகரங்கால் வளர. (ஆசீர்)

வசனம்.

அப்பாமகனே! சகலவைபவங்கள்பெருக ஆசீர்தந்தேன் உன்கையுங்காலும் வளரும் நாம்பிர்மதேவனிடம் போய்வருகிறோம் வாழி வாழிமகனே.

சக்ரவர்த்தி சரஸ்பதிக்குச்சோல் வசனம்.

மாதா வந்தனஞ்செய்கிறேன் போய்வாரும் அம்மணியே.

போது-வசனம்.

அகோதெப்படியென்றால் செய்தவப்புரத்திலிருக்கும் மகுணபரதேசிகாவஸ்செட்டியார் புலம்பிகொண்டிருக்கும் [illegible]ரவர்த்தியைக்கண்டு விசாரிக்கும் விதங்காண்க.

சக்ரவர்த்தி-புலம்பல்.

(நிதிமல்குஷர்க்கவலே-யென்றமெட்)

ஓதெய்வமே! யென்செய்வேன்
ஊழ்வினேயோ வறியேன்

வேந்தன்சொற்படி போலே
விமலா! யென்காலகரத்தை
வெட்டினரே யென்செய்வேன்
ஊழ்வினையோ வறியேன்

திருடனைகவேசெய்து
தியங்கயிப்படி வைத்தீர்
தேவனேயென்செய்வேன்
ஊழ்வினையோ வறியேன்

பெண்சாதிபிள்ளைகளைப்
பிரிந்தும்படவியில்
புலம்பசெய்தீரே
ஊழ்வினையோ வறியேன்

ஐயையோ நோகுதே
அடிமைக்கிப்போதே
ஆருமில்லையென்செய்வேன்
ஊழ்வினையோ வறியேன்

வசனம்.

ஆ! தெய்வமே என்கரமுங்காலும் நோகுதே யென்செய்வேன் ஊழ்வினையோ சம்போ.

பரதேசிகாவல்செட்டி வரும்-தரு.

(என்னாண்டமாரேயென்கணவன்-யென்றமெட்டு)

இந்தப்பாரில்பரதேசி காவல்செட்டிநான்தானே
மகா செட்டிநான்தானே
பொய்யும்பலநம்பேசி
புகழவ்யாபாரஞ்செய்யும் (பாரில்)
தரும்குணவானென
சந்ததமெனைமதிக்கப் (பாரில்)

வசனம்.

ஓய் ... வனேரே நீரேனழுகுறீர் நின்வரலாறென்ன சொல் ... படவேண்டாம்.

{சக்ரவர்த்தி பரதேசிகாவல்செட்டிக்குசொல். திருவாசகசந்தம்.}

ஐயாசெட்டியாரேவுந்த
னடிமைசொல்லுவேனே
வையமிசைஊழ்வினையால்
வந்ததிப்படியே

புருர்

கையுங்
கடை
மெய்யேபெ
மிலேபே
உலகஞ்சதம்
வுறவோ
நலமாய்ப்பெண்
நவிலசதம்
துலங்குமணிப் யம்பே
துகளுஞ்ச யனிருப
இலக்குஞ்சிவப் டு னுயிர்
லேழைச் துசதமே.

வசனம்.

பரதேசி காவல்செட்டியாரே யென் பூர்வகர்ம வசத்தினால் செய்த வப்புரத்தரசன் என்கையுங்காலையுந் துண்டித்துப்போட்டார் இப்படியான் அங்கஹீனமா யிருக்கிறதைவிட சிவபெருமான் பாதாரவிந்தம் போய்சேருமீத நித்திய மற்றபடி இந்த வுலகத்தின் மூன்றுசைகளு மகித செட்டியாரே.

{ பரதேசிகாவல்செட்டி சக்கரவர்த்திக்கு சொல் இந்துஸ்தானி கொப்பி. }

ஏனழுகின்றீர் மெத்தவாகவே மூடவனுமர

அநுபல்லவி.

வானவர்கட்புகழுஞ் சிவன்செய லிதுபாரோ ஏனழு

சரணம்.

விதியுமெவனாலுவிட் டிடப்போர இல்லைபாரோ
மதியினுலொன்றுமில்லை மயங்கி புலம்பிவீணிற் ஏனழு

வசனம்.

மூடவனரே, இப்புவியின்கண் மாந்தர்கட்கு தெல்லாம் விதியே காரணம் ஆகையால் நீ அழுகவேண்டா கு வளவிற்கு வாரு மூடவனரோ.

{ சக்ரவர்த்தி பாதேசிகாவல் செட்டிக்கு சொல் }

வசனம்.

தேவரீர் பகர்ந்தவண்ணம் அடிமை தங்கள் திருஹத்திற்கு வருகிறேன் செட்டியாரே.

...ம்.

...ங்கி பரதேசிக...
..., அங்கு உடமன்னிய

...-தரு.

...ரன - கெத்
...ம்.
இ... கா த்தார்
...லுபல்ல...
...கள் புகழு... சாதுவிரத (உப)
சரணம்.
...காவல் செட்டியைக்...ண
சேஷமங்கட்கூறி செவ்வையுட... போக (உப)

பரதேசி காவல்செட்... உபரி...ஷிக்குச்சொல்
வச...ம்.

போற்றி போற்றி... ...ய வாருமுட்காரும் தேவரீர் சேஷமங்களென்ன சுவாமிக...

... ...தேசிகாவ... செட்டிக்குச்சொல்
வசனம்.

எல்லாமங்கள ...க்ஷமமே பரதேசி காவல் செட்டியாரே

பரதேசிகாவல் ...செட்டி உபரிஷிக்குச்சொல்
வசனம்.

சுவாமிகளே இ...த முடவனுடைய சவிஸ்த்தாரங்களைத் தெரியப்படச் சொல்ல வேணு மகாரிஷியே.

உபரிஷிபர...சிகாவல் செட்டிக்குச்சொல் வசனம்.

செ... ...ரே இன்ன மூன்று வருடஞ்சென்ற பிறகு இப் ... ...வானுடைய சரித்திரம் பூரணமாக தெரியவரும் நான் ...ரயவருகிறேன் செ...டியாரே.

பரதேசிகாவல் செட்டி உபரிஷிக்குச்சொல் வசனம்.
போய்வாரு மகாரிஷியே.

பொது-வசனம்.

அகோ தெப்படியென்றால் செங்கமலம்வீட்டி லிருக்கும் புரூர் வச்சக்ரவர்த்தி பிள்ளைக்ளிடத்தில் உபரிஷிவருகிற விதங்காண்க

உபரிஷிவருகிற தரு.

இராகம்-இந்துஸ்தான்-தெக்.

உபமன்யரிஷி இதோவந்தார்
தபத்தோர்கள்புகழுஞ்சாதுவிரத (உப)
பிள்ளைகளைக்கண்டு பேசியேபோக (உப)
ஆசீரைக்கூறி ஆனந்தமுடன்போக (உப)

சக்ரவர்த்தி பிள்ளைகள்சொல் வசனம்.

வாரும் சுவாமிகளே போற்றிபோற்றி உட்காருங்கள் தேவரீர்இந்தயேழைப்பிள்ளைகளை நாடிவந்தீர்களென்னுடைய இப்பிள்ளைகளுக்குக்கல்விமுதலான சம்பத்துகள்மிகவும்பெருக அநுக்கிரகஞ்செய்யவேணுஞ் சுவாமிகளே.

உபரிஷிபிள்ளைகளுக்குச்சொல் வசனம்.

பாலர்களா உங்களுக்கு கல்விமுதலான சம்பத்துகள் மென்மேலாகப்பெருகும் நான்போய்வருகிறேன் வாழிவாழி வாழிசிகாமணிகளே.

பொதுவசனம்.

அகோ தெப்படியென்றால் நவகோடி நாராயணசெட்டியார் சமூகம் உபமன்யரிஷிவருகிற விதங்காண்க.

உபரிஷிவருகிறதரு.

இந்துஸ்தான் தெக்.

உபமன்யரிஷியிதோ வந்தார்
தபத்தோர்கள்புகழுஞ் சாதுவிரத (உப)
நவிலும் நாராயணசெட்டி சமூகம் (உப)
க்ஷேமங்கள்பேசி செகையுடன்போக (உப)

நவகோடி நாராயணச்செட்டி உபரிஷிக்குச்சொல் வசனம்.

போற்றிபோற்றி ஜயா ரிஷியீஸ்பரரே வாரும் உட்காருங் காங்களெந்தவூர் தங்கள் நாமகரணம் யென்ன யாது விஷயமாக வந்தீர் சுவாமிகளே.

உபரிஷி நவகோடி நாராயணச் செட்டிக்குச்சொல் வசனம்.

செட்டியாரே நமக்குயெந்த [illegible]விசேஷமில்லை

நவகோடி நாராயணச்செட்டி உபரிஷிக்குச்சொல்.

வசனம்.

தேவரீர் வந்தவூர்களில் யென்ன அதிசயமகாரிஷியே.

உபரிஷி நவகோடி நாராயணச்செட்டிக்குச்சொல்

வசனம்.

ஓய் செட்டியாரே நான்பார்த்துவந்த அதிசயத்தில் இப்புவியின்கண் புரூர்வச் சக்ரவர்த்தியைப்போல் சக்ரவர்த்திகளைப் பார்த்ததில்லை, அவருக்கு சநிபகவான் மாய்கையால் நாலுநகரங்கள் பெண்பிள்ளைகளும் போய் கட்சியாக செய்தவப் புரத்தரசனவனை இருடனுகச்செய்து ஒரு கையுங்காலையுந் துண்டித்துவிட்டார்கள், இப்போது நொண்டியாக யிருக்கிறு ரிதுதான் நான் கண்டுவந்த துயரமான அதிசயஞ் செட்டியாரே நான்போய்வருகிறேன் வாழிவாழி.

நவகோடி நாராயணச்செட்டி உபரிஷிக்குச்சொல்

வசனம்.

மகாசந்தோஷம் போய்வாருங்கள் சுவாமிகளே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் டீதேசிகாவல் செட்டியார்வீட்டிலிருக்கும் புரூர்வச்சக்ரவர்த்தி, நந்தவனத்தில் வந்து, கையில் வீணையெடுத்துக்கொண்டு ஊர்வசியை நினைந்து மதனகீதமென்கிற பாடலைபாடும் விதங்காண்க.

புரூர்வச்சக்ரவர்த்திபாடல்.

ஜோகியானுதுகி யாங்காங்குய் யென்றமெட்.

வாராய்பெண்ணே மையல்மீறுதே
வந்துதென்றலும் வீசுதே
மாரன்கணைப் பொல்லாதே — வாராய்
மாங்குயில்கூவ மலர்மணம்வீச
ஓங்கியான் வீணைமீட்டமேவ — வாராய்
சுந்தரத்தேனே திகழுமென்கண்ணே
நந்தவனத்தினிலே முன்னே — வாராய்
திருமுகமாதே திவ்யவழுதே
வுருகிறேனூர்வசி யுனைநினைந்தே — வாராய்

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் நந்தவனத்தில் புரூர்வச்சக்ரவர்த்தி வீணை [illegible] கொண்டு பதம்பாடி யிருக்குமளவில்செய்தவப்புரத்தரசன்பக்கல் [illegible] காவல் [illegible] ட்க்கும் விதங்காண்க.

புஷ்பாஞ்சாலி தோழிகளுக்குசோல் வசனம்.

அடிசேடியர்களே இதுயென்ன ஆச்சரியம் இவ்வளவு சுகமான மோகப்பாடல் நான் கேழ்க்கவும் யென்மீதிருந்த பச்சைக்கல்லுகள் உருகிவிழுந்ததே நமதுநகரி லிப்படி சங்கீதசாஹித்யத்திற் சிறந்தவர்களில்லையே யெனக்குமோகமேலிடுதே போய் பார்த்துவாருங்கள் தோழிகளே.

சேடியர்கள் புஷ்பாஞ்சாலிக்குச்சோல் வசனம்.

அம்மணி இந்தட்சணமே போய் பார்த்து வருகின்றோம்தாயே

தோழிக்குதோழிசொல் வசனம்.

அடிகமலா ஆதோபார் நமதரசியின் இரத்னபெட்டியைத் திருடி கையுங்காலும்வாங்கின திருடனல்லவோ பதம்பாடுகிறான் என்ன அதிசயங்கமலா.

தோழிக்குதோழிசொல் வசனம்,

ஆமாண்டி வதஞ்பிஷேகம் அந்ததிருடன்தான் கையில் வீணைவைத்துக்கொண்டு இவ்வபாட்டுகள் பாடுகிறான் வாருங்கள் புஷ்பாஞ்சாலிக்குபோய் சொல்வோம் கமலா,

தோழிகள் புஷ்பாஞ்சாலிக்குசொல் வசனம்.

அம்மணி நாங்கள்தேடிக்கொண்டுபோகையில் நமதரண்மனையில் கன்னமிட்டு ஆபரண பெட்டியைதிருடி கையுங்காலும் வெட்டுண்டமுடவன் கரத்தில்வீணையை வைத்துக்கொண்டு நந்தவனத்தில் பதம்பாடுகிறான் தாயே.

புஷ்பாஞ்சாலி தோழிகளுக்குசொல் வசனம்.

திருடனாகயிருந்தாலு மெனக்கென்ன நானவனை இருவதுவைச்செய்துக்கொள்ளுவேன் அவனையன்றி வேறொருவனை கலியாணஞ்செய்கிறதில்லை பாங்கிகளே.

புஷ்பாஞ்சாலிமோகமீறி புலம்பல்.

இந்துஸ்தான்-கசல்.

அதிகவிரகக்கொண்டேன் அவர்பதம்பாட
அதனாலே அதனாலே அதனாலே சகியே

எங்கும் நான் கேளா தெழில்வீணை மீட்டவே
எழிலாக வெழிலாக வெழிலாக சகியே

மையல்மீறுதே மனந் தடுமாறுதே
அடிமாதே அடிமாதே அடிமாதே சகியே

கலியாணஞ் செய்தாலென் ளுணச்கள் தீருமே
கனிவாக கனிவாக கனிவாக சகியே

(வ-ம்) ஆ தோழிகளே இனி நானேன் அவர் வீணையைமீட்டி சங்கீதம்பாடினமுத லென்மனக்தாகம் வில்லையே சேடியர்களே.

பொது வசனம்.

அகோ வெப்படியென்றால் புஷ்பாஞ்சாலியின் மையலை நாதியர்கள் செய்கவட்புரத்தரசனுக்கும் அரசிக்கும் போய் சொல்லுகிற விதங்காண்க.

சேடியர்கள் அரசனரசிக்குச் சொல் வசனம்.

வேந்தே போத்தி மகாரண்மனையில் கன்னமிட்டு நகைபெட்டியை திருடி கைப்புங்காலேயும் வாங்கிவிட்டீர்களே அந்த திருடன் நந்தவனத்தில் வீணையைக்கொண்டு பதம்பாடினான் அப்பாடலை புஷ்பாஞ்சாலிகேட்டு தானணிந்திருந்த பச்சைக்கல்லுகளுங் கீழே வுருகி விழுந்துவிட்டது அக் கள்ளனையே அம்மாள் கலியாணஞ் செய்துகொள்வேனென மிகவும் மையல்கொண்டுவாடுகிறாள் அரசனே.

அரசன் தோழிகளுக்குச்சொல்
வசனம்.

தோழிகளே எனதருமை புதல்வி சௌபாக்கியவதி புஷ்பாஞ்சாலியை வெகுபத்திரமாய் பார்த்து வாருங்கள் சீக்கிரத்தில் பாணிக்கிரகணத்தை என் மகளுக்கு ஆரம்பஞ் செய்கிறேன் சேடியர்களே.

தோழிகள் அரசனுக்குச்சொல் வசனம்.

பத்திரமாய் பார்த்துவருகிறோம் வேந்தே.

அரசன் மந்திரிக்குச்சொல் வசனம்.

மந்திரியெனது குமாரத்தி புஷ்பாஞ்சாலிக்கு கலியாணவிஷயத்தை ஆரம்பஞ்செய்ப வேணுமானால் சபாமண்டபத்தில் சகலதேச அரசர்களேயும், அழைபிக்கும்படியான யேற்பாட்டை அதிசீக்கிரஞ்செய்ய வேணுமந்திரியே.

மந்திரி அரசனுக்குச்சொல் வசனம்.

இந்தட்சணமே எல்லா அரசர்களேயும் அழைபிக்கிறேன்வேந்தே

மந்திரி கட்டியனுக்குச்சொல் வசனம்.

கட்டியா, சபாமண்டபத்தை துரிதத்தில் தயார்செய்துவிட வேண்டியது வாசலி...

செட்டியல் மந்திரிக்குச்சொல் வசனம்.

இந்தட்சணமே எல்லாந் தயார்செய்து விடுகிறேன் மந்திரியே

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் செய்தவப்புரத்தரசன் மந்திரி சகல தேசத்தரசர்களுக்கும் வதுவைப்ரகடநமனுப்பி சகலபார்த்திபர்களும் வந்திருக்குமளவில் புரூர்வச்சக்ரவர்த்தியை பரதேசி காவல்செட்டியார், கலியாண மண்டபத்திற்கு சக்ரவர்த்தியை அழைக்கிறவிதங்காண்க.

பரதேசிகாவல்செட்டி சக்ரவர்த்திக்குச்சொல்

காபிரூலே யேடாவட்டியென்ற ராவளிமெட்.

சந்தோஷமாகக் கலியாணமண்டபம்மேலாம்
வாருமுடவனாரே யெந்தனுடனே.

நல்லமலர்வதனி நங்கைபுஷ்பாஞ்சாலிக்கு
நகரத்திலிவ்வதுவை நடக்கப்போகின்றதாலே. சந்

ஏதுயோசனை பெரிதாகவே நீர்செய்குறீர்
எந்தனுடன்வருக யினியென்னதாமதமே. சந்

வசனம்.

ஓய்முடவனாரே மெதுசெய்தவப் புரத்தரசன்மகளுக்கு கலியாணமானதால் நாமிருவரும்போய் பார்த்துவரலா மெழுந்திரு முடவனாரே.

சக்ரவர்த்திபரதேசி காவல்செட்டிக்குசொல் வசனம்.

செட்டியாரே நானோமுடவன் அந்தகலியாண மண்டபத்திற்குவர பாத்திரவானல்லவே யென்றாலுந் தேவரீருடைய மொழிகளை தவிராமல் தங்கள்கூடவருகிறேன் செட்டியாரே.

பொது வசனம்.

அகோ செப்படியென்றால் கலியாணமண்டபத்திற் சகல தேச அரசர்களுந் வந்திருக்குமளவில், அந்தப்பாக்கிலிருக்கும் புஷ்பாஞ்சாலியை தோழிமாருடன் வரவழைத்து, செய்தவப் புரத்தரசன் மகளே வுனக்கிஷ்டமான அரசருக்குமாலையிடுயென ஆக்யாபித்தவுடன் புஷ்டாஞ்சாலி சாரதாம்பாளை பூஜித்து மாலை யிடுகிற விதங்காண்க.

புஷ்பாஞ்சாலி சபைக்கு

மாலையை கரத்தில்வைத்துக்கொண்டு சொல்

இராகம்-இந்துஸ்தான்-தாதரா.

செந்தாமரைமீ திருப்பவளே சுந்தரியென் சரஸ்பதியே
வந்தாதரியே இந்தசமயம் மங்கையென்னை முந்து [illegible]
உன்னைநம்பியே மாலைபோடுறேன் உசிதவளோ யென்னை [illegible]ற்பீரோ.

வசனம்.

சபையோர்களே இவர்தானென்னுடைய பிராணகாவலன் இவரையன்றி வேறொருவருமில்லை மன்னர்களே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் புஷ்பாஞ்சாலி முடவனாகிய புரூர்வச் சக்ரவர்த்திக்கு மாலையிட்டவுடன் செய்தவப்புரத்தரசனுக்குகோபமேலிட்டவனே கடவுளை தியானித்தழுகும்விதங்காண்க.

இராகம் பாஸ் ஆதிதாளம்.

பல்லவி.

தேவாதிதேவப்பரனே ஐயையோ இவள்
திருடனுக்குமாலையு மிட்டாளேயென்னசெய்வேன்

அநுபல்லவி.

காவலன்புத்ரியெனக் ககணமெல்லாந்தெரிந்தவ்
கையுங்காலுமில்லாதக் கள்ளனைமாலையிடக்
காட்டினீரேதுயர்மீட்டினீரோ விதிமூட்டினீரோ
கலங்குதேயென்மனமது தேவாதி

சரணம்,

பெண்ணைப்பெற்றுமெனக்கு பேரிப்படி வாய்ந்ததே
உள்ளங்கலங்கின்றதென் னுயிருடனிருப்பேனோ
ஓ! சிவனே! அருளீய்பவனே மா! கேஸ்பரனே
உன்செயலே இதுவோ (தேவாதி)

வசனம்.

ஈஸ்வரா நின்செயலோ! சபையோர்களே பார்த்தீர்களா! கையுங்காலுமில்லாத திருடனுக்கு மாலையிட்டாளே இனியென்னுயிரை வைப்பேனோ தெய்வமே.

பொது - வசனம்.

அகோ தெப்படியென்றால் செய்தவப்புரத்தரசன் மிகவுந் துயரமாகி தன்னுயிரை போக்கிக்கொள்ளலாமென எண்ணும்

போது குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவர் சபைக்கு வருகிற விதங்காண்க.

வசிஷ்டமுனிவர் வருகிற தரு

இராகம் - இந்துஸ்தான் - ஜெத்.

குலகுருவசிஷ்டமுனிநாதர்வந்தார்
செய்தவப்கர்த்துச் செம்மலேக்காண; குல
அரசன்கோபத்தை அன்புடனேதணிக்க குல
துயரத்தைநீக்கி சுபஞ்சொல்லவேபோக. குல

வசனம்.

அரசே இப்படியுமெண்ணலாமா எல்லாம் விதியின்பயன் உனக்குப் பிரியமில்லாமற்போனால் அப்பெண்ணையும் முடவனையும் அடவிக்கனுப்பி விடலாம் வேறுசிந்தனை செய்யவேண்டாம் வேந்தனே.

அரசன் வசிஷ்டருக்குச்சொல் வசனம்.

சுவாமிகளே தேவரீர்பகர்ந்தவண்ண மிவர்களை ஆரண்யமனுப்பிவிடுகிறேன் குலகுருவே.

செய்தவப்புரத்தரசன்.

தன்புதல்வியைப்பார்த்துசொல்

முத்துச்சாண்டோ வாரிரேயென்றமெட்.

அருமையுள்ள யெந்தன்மகளே
ஐயோவுன்தலை யெழுத்ததின்பயனோ மகளே
பெருமையுமில்லா முடவனின்மீது
பெட்புடனே மையல்கொண்டுநீ
புகழாகவே மாலையை
இட்டாயிதற் கோவுனை பெற்றேனுமகளே அருமை
ஆனதால்மகளே நீங்களிருவர்
அன்பாக யெங்களைவிட்டுமே
அடவிக்குபோ யுங்களின்
காலங்கழித்திடுங்கள் சொன்னேன்மகளே. அருமை

வசனம்.

என்னருமைமகளே உன் விதியின் பயனிப்படி யிருந்தது யென்னசெய்வோம் நீயுமுன்னெஜமானும் ஆரண்யத்திற்போய் காலத்தைக்கழித்திடுங்கள் இந்நகரிலிருக்கவேண்டாமகளே.

புஷ்பாஞ்சாலி தன்தந்தைக்கு சொல்

இராகம் - ஆனந்தபைரவி - விருத்தம்.

எந்தனைப்பயன்றதந்தை தாய் மேனீங்கட்கேளீர்
வந்தமுன்விதிவசத்தால் மன்னவனோ க்கமைந்தார்
சிந்திக்கவேண்டாம்நீங்கள் சிராயானடவிக்கேக
சந்தோஷமாகவாசீர் தந்திடீர்தந்திடீரே.

வசனம்.

என்தந்தையே யென் மாதாவே வுங்கள் சொற்பிரகார மடியான் என்கணவனுடன் ஆரண்யம்போய் வருகிறேன் நல்லாசீர் தந்தருளும் பெற்றோர்களே.

பொது வசனம்.

ஆகோ தெப்படியென்றால் புரூர்வச் சக்ரவர்த்தியும் புஷ்பாஞ்சாலியும் செய்தவப்புரத்தைவிட்டு அடவிக்கு வரும்போது புஷ்பாஞ்சாலியைபார்த்து சக்ரவர்த்திசொல்லுகிற விதங்காண்க.

சக்கரவர்த்தி புஷ்பாஞ்சாலிக்கு சொல்

பலதரங்கெளசிகனை யென்றவர்ணமெட்.

ஐயோமாதேநீயென்னை மாலையுமிட்டுஇந்த
அடவிக்குவந்திடவும் வாய்ந்ததிப்போதே — ஐயோ
வையமிசை பெற்றோரைவிட்டு
மகிழ்மகிழ் மகிழ்வாக யிப்போதே — ஐயோ
எத்தனைமன்ன ரிருக்கவுனக்கு
எழிலெழி லெழில்வாகயிப்போதே. — ஐயோ

சக்ரவர்த்தி வேறுபுலம்பல்

இராகம் - ஜாவளிப்யாகு - ரூபகம்.

மூடவனுன்தானே யென்னையேன்மாலைஇட்டாய்
அடி முன்னே நல்லக்கண்ணே
எழில்பெண்ணே புஷ்பாஞ்சாலியே நீ. — மூட

முந்திக் எனம் களவுமிட்டவனுனே
அடிமுன்னே நல்லக்கண்ணே
எழில்பெண்ணே புஷ்பாஞ்சாலியே நீ. — மூட

வேறுஅரசரில்லையோ சொல்லுனக்கு
அடிமுன்னே நல்லக்கண்ணே
எழில்பெண்ணே புஷ்பாஞ்சாலியே நீ. — மூட

வசனம்.

பெண்மணே புஷ்பாஞ்சாலி நான்முந்திவுன் தாயார்நகைபெட்டியைத்திருடின கள்ளனுந்தவிர கையுங்காலுமில்லாத முடவனுச்சுதே யென்னையேன்மணம் புரிந்தாய் வேறுபுருஷர்களுனக்கில்லையா மாதே.

புஷ்பாஞ்சாலி சக்ரவர்த்திக்குச் சொல்

இராகம் - முகாரி - விருக்தம்.

எனக்கிந்தவயதில்வாய்ந்த யேந்தல்நீ யென்மேல்
பிணக்குதான் வைங்கொளுதுன் பெட்டியலாமுணர்ந்தேன்பாரில்
கணக்குள்ளபடியேநானின் காதலியானேனிப்போ
மணக்குமின்மொழியைவிட்டு மாதென்னையணைந்திடீரோ.

லாவணி.

நாதா நங்கை சொல்விவருவேன் மகிழ்விநோதா
கதிநீதா நந்தவனமதிற் பாடினமுகலாய் நாதா

மாதுமணிந்திருந்த மா! பச்சைகல்லுருக
னையலதிகமகளை வந்துனை மாலையிட்டேன் நாதா

வாதா வுலகினிலே விதிவிடுமோ போதா
இன்னம்நீதா யென்னிடம் விளையாடவும் போகாதா நாதா

பாதங்கெதியே யென்று பாரியாளுனை வேண்ட
சீதமுக வள்ளலே சேர்ந்து வெனைமகிழும் நாதா

வசனம்.

பிராணநாதா நீரொருநாள் நந்தவனத்தில் காக்கிலைவீணை வைத்துக்கொண்டு பதம்பாடினவுடனணிந்திருந்த பச்சைக் கல்லுகள் உருகி கீழே விழுந்ததும் அதனலெனக்குன் காதல் தின மேல் பெருகவுந் தங்களையே மாலையிட்டேனெல்லாம் பகவான்செயல் நாமிருவருமிந்த ஆரண்யத்தில் மங்களமாய் வாழ்ந்திருக்கலாம் வேறுயோசிக்கவேண்டாம் மகிபா.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் புரூர்வசச்சக்ரவர்த்தியும் புஷ்பாஞ்சாலியும் அடவியின்கண் வாழ்ந்திருக்கும் நாளில் சனி வான்வந்து சொல்லுகிறவிதங் காண்க.

வசனம்.

புரூர்வச் சக்ரவர்த்தியே முந்தினா மூன்னிடத்தில்வந்து இளமையில் வரலாமா முதிர்மையில் வரலாமாயென்று வினவியபோது இளமையில் வாருமென் றென்னைக்கேட்ட அதுமுதலிது

வாயில் நாமுன்னே செய்துவந்த கொடுமைகளெல்லாம் பொருத்திரே நீரே சத்தியகுணசாந்தன் இன்னமுன் நிரோகக் கார்தியம் கைகால்வளர்ந்தும் வாக்குபிசகாமல் அரசுபுருவீர்சக்ரவர்த்தியே.

சக்ரவர்த்தி சநிபகவானுக்கு சொல்.

இராகம் - பைரவி - அடதாளம்

பல்லவி.

ஆசிரைப்போல தேவரீர்தந்த

அநுபல்லவி.

காசினிலேசம்ப தாகவிளங்கநீவே
கனிவாயிந்தசப யங் கழதினதாலே
பட்டப்பாடுகள் போதுமென்கோவே
கதிநீதா அருள்தாதா மலர்பாதா (ஆ)

சரணம்.

எல்லாமுந்தன்செயலே இயம்பபெரும்பூவிலே
என்னிட விதிப்பயன் தப்பாதகோவே
எளியன்மீதி லிரக்கம்நீர் வையே
கதிநீதா அருள்தாதா மலர்பாதா (ஆ)

வசனம்,

அடிமை தங்களுடைய ஸ்ரீன் பிரகாரம் இருக்கின்றேன் போய் வருங்கள் போற்றிபோற்றி ஐயனே,

சனிபகவான் சக்கிரவர்த்திக்குச் சொல்

வசனம்.

போய்வருகிறேன் வாழிவாழி சக்ரவர்த்தியே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் புரூரவச்சக்ரவர்த்தியும் புஷ்பாஞ்சாலியும் அடவில் தெய்வீகபுரமென் றொன்றுண்டுச்செய்து தெய்வீகமாக விளங்கிவரும் நாளில் ஆயர்பாடியில் செங்கமலமிடைச்சி வீட்டில் வளர்ந்திருந்த இரண்டுப்பிள்ளைகளும் தெய்வீகபுரத்திற்குவருகிற விதங்காண்க.

சக்ரவர்த்தி இரண்டுப்பிள்ளைகளைப் பார்த்துப் புலம்பல்.

கவியிலேலிதம்யென்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பாலர்களே! நீங்களாரெந்தவூர்சொல்

அநுபல்லவி.

ஞாலமீதிலுங்களைப்பார்த்தால் இராஜபுத்ரர்போல்
நயமாகவேதோணுதே நவிலுவீரோ இப்போதே (பால)

சரணம்,

மனதிற்குறைவையாமல் கனமுடனேசபையில்
இனமுளச்சுந்த்ரர்களே இயம்பிடுவீர் நீங்களே (பால)

வசனம்.

அப்பா பிள்ளைகளே உங்களைப்பார்த்தால் இராஜப்புதல்வர்கள்போ லிருக்கின்றது ஆனதால் நீங்களெந்தவூர் உங்கள்பேரென்னமனதிலேயாதொன்றும் வையாமல் தெரியப்படச்சொல்லுஞ் சிகாமணிகளே.

பிள்ளைகள் சக்ரவர்த்திக்குச் சொல்

புலம்பல்.

ஆரண்யத்தே-யென்றவர்மெட்டு.

அரசே எங்களூர் ஆயர்பாடி.
அறிந்துக்கொள்வீரே
அவனியில்தந்தை தாயுமற்ற பிள்ளைநாங்களே
எங்களைசெங் கமலமென்னும்
இடைச்சி வளர்த்தவள்
ஏந்தலே! யெழிலாய்ப்பரதேசி நாங்களே
ஏதாகிலும் வேலைசெய்துப்
பிழைக்கலாமென எண்ணிவந்தோம்
எங்களைக்காப்பாற்ற வேணுமே.

வசனம்.

வேந்தே எங்களூர் ஆயர்பாடி எங்களைவளர்த்தவள் செங்கமலமென்பவள் தங்களிடமேதாகிலும் வேலை இடைக்குமென்று வெகுஅபேட்சையுடன்வந்தோம் யெங்களைக்காப்பாற்றவேணும் அரசே.

சக்ரவர்த்தி இரண்டுப்பிள்ளைகளுக்குச்

சொல் வசனம்.

என்னிடங் காவலர்களாயிருங்கள் பிள்ளைகளே.

பிள்ளைகள் சக்ரவர்த்திக்குச் சொல்

வசனம்.

அப்படியே காவல்களாயிருக்கின்றோம் வேந்தே

பொது-வசனம்.

அகோ தெப்படி யென்றால் நவகோடி நாராயணச்செட்டி பெட்டியையெடுத்துக்கொண்டு தெய்வீகப்புரத்தில் விளங்கும் புரூரவச்சக்ரவர்த்தி யிடம் வருகிறவிதங்காண்க.

நவகோடி நாராயணச் செட்டி

சக்ரவர்த்திக்குச்சொல் வசனம்.

அரசே போற்றிபோற்றி.

சக்ரவர்த்தி நவகோடி நாராயணச் செட்டிக்குச்

சொல் வசனம்.

ஓய் செட்டியாரே இந்தபெட்டியைப் பார்த்தால் வெகு சுந்தரமாக யிருக்கின்றது இதிலிருக்கின்றவைகளெல்லாவிஷயங்களையும் தெளியாமல சொல்லுங்காணுஞ் செட்டியாரே.

நவகோடி நாராயணச்செட்டி

சக்ரவர்த்திக்குச்சொல் வசனம்.

பிரபு என்னிடம் கணக்கெழுதியிருந்தவன் பெண்சாதி இவளுடைய சௌந்தரியத்தைப்பார்த்து ஒருநாளிவள் கூலிவாங்க வந்தப்போது இவளைவீட்டிலுள் விட்டுக் கதவைசாத்திவிட்டேன் அதுமுதலிதுவரையிலிந்தப்பேழைக்குள் ளிருக்கின்றாள் யெப்படி இரந்தபோதிலுந் இரக்கவில்லை ஆனதால் தேவரீரிடத்தில் அனேகமகுத்துவங்கள் நடக்கின்றதென கேள்வியுற் றிப்பெட்டியைத் திரந்துக்கொள்ளலாமென யெடுத்து வந்தேன் சுவாமிகளே.

சக்ரவர்த்தி நவகோடி நாராயணச்செட்டிக்கு

சொல் வசனம்.

மெத்தசந்தோஷம் செட்டியாரே இந்தப்பெட்டியை என் சமுகம் வைத்துவிட்டுபோய் நாளையதினம் வாருங்காணுஞ் செட்டியாரே.

நவகோடி நாராயணச்செட்டி

சக்ரவர்த்திக்குச்சொல் வசனம்.

அப்படியேவைத்து போகிறேன் சுவாமிகளே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் நவகோடி நாராயணச்செட்டி சக்ரவர்த்தியிடம் பெட்டியைவைத்துப் போனபின் இரண்டுபேர்

ளைகளையும் பெட்டிக்கு காவலாக விருக்கும்படி செய்கிறவிதங் காண்க.

சக்ரவர்த்தி காவலர்களுக்கு சொல்

வசனம்.

அப்பா காவலர்களே நீங்களிருபேரு மிந்தபெட்டிக்குகாவலர்களாகயிருக்க வேண்டியது.

காவலர்கள் சக்ரவர்த்திக்கு சொல்

வசனம்.

தேவரீர்சொற்பிரகாரம் பெட்டிக்குகாவலிருக்கின்றோம்வேந்தே

போது வசனம்.

அகோதெப்படியென்றால் பெட்டிக்கு பிள்ளைகள் காவலாகயிருக்கும்போது இளையப்பிள்ளையாகிய தருமசீலன் சத்தியதரனைநோக்கி கதைசொல்லென இனிசத்தியதரன் கதைசொல்லுகிறவிதங்காண்க.

சத்தியதரன் கதைசொல்

அகவல்.

அண்ணாவேகேளு மன்புடனுனக்கு
உன்னிதமாக வொருகதைபுகலே
இத்தரையெல்லா மியம்பிடும்பெயரோன்
சத்தியப்புரூர்வச் சக்கிரவர்த்தி
நாடுநகற்பொரு ளியானையும்விட்டுப்
பிடியற்பெண்டு பிள்ளைகள்வ[illegible]ப
அழைத்துமேவந்து அவனியிலந்தோ
பிழைக்கவேகூலி வேலைகள்செய்ம்
கூலியைவாங்கக் கூப்பிடதேவி
மாலைப்பொழு தங்குச்செல்ல
நாராயணனென நவின்றிடுஞ்செட்டி
சேரவேயவளை செய்தவோர்சூது
இடுக்கமாவறையி லிருக்கிறவழுதை
எடுக்கவேபோக வியம்பிடுங்காலை
சென்றநல்லரசி சிறைபட்டதுபோல்
இன்றும்வராம லிருக்கின்றாளையோ
இறங்குநல்லரச னி[illegible]யவோரிடத்திற்
உறங்கியப்போது வுற்றவேகள்ளர்

செய்தவப்பரத்து செம்மலாமரசன்
வைபவமோங்கு வளமுள்ளவீட்டி
களவிட்டப்பெட்டியைக் கண்வளரரசன்
இளகியப்பக்கலி லிருத்தி ச்செய்ய
தேடியகாவலர் திருடனிவனென
காடியவரச னடுவினில்திருத்த
கண்டவோரரசன் ஒருகரங்காலையுந்
துண்டமாய்வாங்க தூண்டினு னுடனே
இதுவேகதைதா னென்சோதரனே
அதிபர்கள்கெதியை யவனியிற்பாரோ

பெட்டியிலிருக்கும் செயப்பிரதை சொல்

வசனம்.

அப்பா காவலர்களே நீங்கள்சொல்லிவந்தக் கதையைகாலை காலையில் அரசன்சமுகஞ் சொல்லவேணுங் காவலர்களே.

தருமசீலன் சத்தியதரனுக்குச் சொல்

வசனம்.

அப்பா சகோதரனே இந்தப்பெட்டியி லிருக்கிற விந்தை யைப்பார்த்தீரா ஆ! ஹா!! பயமாயிருக்கின்றதே உள்ளேயிருக் கின்றது தெய்வமாக யிருக்குமா சகோதரனே,

சக்ரவர்த்தி காவலர்களுக்குச் சொல்

வசனம்.

காவலர்களே பெட்டியின் விஷயமென்ன.

காவலர்கள் சக்ரவர்த்திக்குச் சொல்

வசனம்.

அரசே அப்பெட்டியிலிருக்கிற தெய்வத்தைக் கேட்டால் தெரியவரும் வேந்தே,

பொது வசனம்.

ஆகோ தெப்படி யென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி பெட்டி யையும் பிள்ளைகளையும் பார்த்து யோசித்திருக்குமளவில் சரஸ் பதியம்மன் அசரீரியாகவந்து சொல்லுகிறவிதங் காண்க.

சரஸ்பதிஅம்மன்சொல்

இராகம்-கல்யாணி-ரூபகம்,

மகனே சக்ரவர்த்தியே
மயக்கவேண்டாஞ் சொல்வேனே

37 அநுபல்லவி.

அகமகிழ்வாய் நீர்தானே அறிவிப்பனே முன்னமே (மக)

சரணம்.

இந்தப் பிள்ளைகளுக்தான் எந்தலே யுன்னுடைமதே
அந்தப்பேழைக்குள்ளிருக்கும் அரசியுன்பாரிதானே (மக)

வசனம்.

மகனே சக்ரவர்த்தி இவ்விரண்டு பாலர்களு முன்பிள்ளைகளே அப்பெட்டியிலிருக்கின்றவள் கின்கல்த்திரம் ஜெயப்பிரதைஇது நாள்வரையில் பெட்டியைப்பாதுகார்த்து வந்த நவகோடிநாராயணச்செட்டியார் முன்ஜென்னத்தில் பிள்ளையாகவேயன்றிம் ஆனதால் நீர்போய்ப்பெட்டியைத்தொடும் வேறுசிந்தனைச்செய்யவேண்டாஞ் சக்ரவர்த்தியே.

சக்கரவர்த்தி சொல் புலம்பல்.

திருவாசக சந்தம்.

இதோகாணும் இதோகாணும் இதோதொடுகின்றேன் (இதோ)
தாயேயுந்தன் சொற்படிக்கு தரணியில்பெட்டியை (இதோ)
மாதாவுந்தன் மொழியதைபோல் மக்களையுங்கண்டேன் (இதோ)
மா! வுலகில் நாங்களொன்றாய் மகிழ்வாய் சேரப்போது (இதோ)

வசனம்.

மாதா போற்றி நாங்களனைவரும் ஒன்றாகச்சேர்ந்து வாழ தாங்கள் மொழியைப்போல் காலம்வந்துவிட்டது இதோபெட்டியைத் தொடுகிறேனம்மணியே.

பிள்ளைகள் தாய்தகப்பனைக் கண்டு புலம்பல்

இராகம்-ப்யாகு-தேசிக ரூபகம்,

மாதாவே யெங்களைவிட்டு மயங்கப்பாலர்கள் மனம்
ஆதரையில் பெட்டிக்குள்ளே அன்னையே வீற்றிருந்தாய்
அறிகிலோம் அறிகிலோம் அறிகிலோ மென்தாயே (மாதா)

பாலர்கள் செய்தவினையோ பரமன் செயலலது
காலத்திற் சிபகவான் கட்டளையோ பெற்றவளே
அறிகிலோம் அறிகிலோம் அறிகிலோ மென்தாயே (மாதா)

தந்தைதா னிவரோயென்று தாயே இப்போதே யறிந்தோம்
விந்தையுட னெல்லோரும் மேதினியிற் வந்துசேர்ந்தோம்
விளங்கவே விளங்கவே விளங்கவே யென்தாயே (மாதா)

வசனம்.

ஆ! பெங்களைப்பத்துமாதஞ் சுமந்துப்பெற்ற மாதாவே யெங்களைவிட்டு இதுவரையி லிப்பெட்டியில் எப்படியிருந்தீர் மாதாவே! மாதாவே!! யெங்களுக்கு முத்தந்தாரும் தந்தையே யெங்களுக்கு முத்தந்தாரும்.

ஜெயப்பிரதை பிள்ளைகளுக்குச் சொல்

புலம்பல்,

இராகம் அசாவேரி விருத்தம்.

கண்மணியாகவெங்கட் கமைந்தபாலர்களேநீங்கள்
மண்மீதில்கண்ணீர்கொண்டு மயங்கியேபுலம்பவேண்டாம்
விண்ணவர்பணியுமந்த விமலனின்செயலிதெல்லாம்
நண்ண... ...டென்பீரோ நம் நலமுடனிருப்போம்தானே.

இராகம்-நாதநாமக்கிரியை-திரிபுடை.

பல்லவி.

கண்மணிகளே நீங்கள்மெத்தக்
கதரிப்புலம்பவேண்டாம் (கண்)

அநுபல்லவி.

விண்ணவர்பணியுமந்த விமலனின்சோதனையென் (கண்)

சரணம்,

உங்களைப் பயின்றதந்தை ஓ! ஹோ மெத்த பாடடைந்தார்
அங்கழும் பதருதையோ அவனன்றி யணுகுமோயென் (கண்)
ஊழ்வினையும் விடுமோ ...ன் உள்ளப்படியே யுலகில்
தாழ்ந்தவர்க ளுயர்வ...ோ சந்ததமறைப்புகலேன் (கண்)

வசனம்.

பாலர்களா ...னழுகுதீர்கள் அழவேண்டாம் யெல்லாம் விதிபின்படியேமுடியும், உலகின்கண் தாழ்ந்தவ ருயர்த்தப்படுவார் உயர்ந்தவர் தாழ்த்தப்படுவார் நாமென்ன செய்யலாங்கண்மணிகளே.

பொது வசனம்.

அகோ ...தப்படியென்றால் புரூர்வச் சக்ரவர்த்தியும் ஜெயப்பிரதை புஷ்டாஞ்சாலி இரண்டுபிள்ளைகளு மொன்றாகச்சேர்ந்திருக்கும்போது சகிபகவான் வருகிறவிதங்காண்க.

சநி[illegible]ான் சக்ரவர்த்திக்குசொல்

வசனம்.

ஆ! எனதருமை புரூர்வச்சக்ரவர்த்தியே உனக்குநிகரான சக்ரவர்த்திகளிவ்வுலகிலில்லே ஆகையா லுமக்குவேண்டிய வரங்களைக்கேளும் தருகிறோம் சக்ரவர்த்தியே.

சக்ரவர்த்தி சநிபகவானுக்குச்சோல்

இந்திரனுனேமோகமாகினர் என்றவர்ணமெட்.

பல்லவி.

இந்தவரந்தரவேணுமே ஸ்வாமி
சுவாமியே நீரும் இந்த

அநுபல்லவி.

சந்தசுமுமென் சரிதைக் கேட்போர் படிப்போர்கட்கும்
தரணியிவிடற் செய்யாதே சுவாமீ சுவாமியே நீரும் இந்த

சரணம்.

உலகிற் சம்பத்தா யெங்கு முன்னே நினைந்தே புகழ
வசித முடனே வைபவ சுவாமி சுவாமியே நீரும் இந்த

புலவ னிராமச் சந்த்ரன் புகழ் தமிழாலே இந்தப்
புரூர்வச் சக்கரவர்த்தி சரிதைப் பாட சுவாமியே நீரும் இந்த

வசனம்.

சுவாமிகளே அடிமை தேவரீரால் கேட்டுக்கொள்வது யென்னவென்றால் யென்சரித்திரத்தைச் சொல்லுகிறவர்கட்கும் கேட்க்கிறவர்கட்கும் இராமச்சந்திரப் புலவரியற்றிய இந்நாடகத்தை வாசிக்கின்றவர்கட்கும் தேவரீர் இயாதொரு துன்பஞ்செய்யாமல் காத்தருளவேணும் ஐயனே.

சநிபகவான் சக்ரவர்த்திக்குச்சொல் வசனம்.

எனக்கன்பார்ந்த சக்ரவர்த்தியே நீர் நம்மை நினைவிய வண்ணம் காத்தருளுவோம் போய்வருகிறேன் வாழி வாழி.

வசனம்.

அகோ தெப்படியென்றால் புரூர்வச்சக்ரவர்த்தி சநிபகவான் மாய்கையால் தன்பெண்டுப் பிள்ளைகளையு மழைத்துக்கொண்டு இந்திரப்புரத்தைவிட்டு வெளிவந்தவுடன் மறுகாட்காலையில் மதிதீரனென்கிறமந்திரி, சக்ரவர்த்தி அரண்மனையி லில்லாமையால் விசனமுற்று காவிவேடந்தரித்து தேடிவருகிறவிதங்காண்க.

மதிதீர்மந்திரிசக்ரவர்த்தியை நினைத்து புலம்பல்.

அநாதிநான்தேவே யென்றமெட்.

எல்லாமுந்தன்செயலே எனதரசனிங்குயில்லையே-நான்
எங்குதேடிபார்ப்பேன் இயம்புமகாசிவனே. எல்லா

பெண்டுப்பிள்ளைதனையும் புகழாய்வரழைத்துப்
போயினரோலறியேன் இயம்புமகாசிவனே. எல்லா

சநியன்செய்தசூதோ தடுமாறுதென்னுளமே
சற்றுங்க்ரூடைக்கூர்ந்து இயம்புமகாசிவனே எல்லா

வசனம்.

ஆ சிவனே! எனதரச னிங்கு யில்லையே பெண்டுப்பிள்ளைகளையழைத்துக்கொண்டு நகரைவிட்டு வெளிபோயினரோ யென்னசெய்வேன் யெங்குதேடிப்பார்ப்பேன் சம்போ.

...பாகுஜாவளி அடதாளம்.

ஓராஜராஜேக்ர்ரா ஓ...ல்லகுணு
உன்மனம்வந்ததா எனைவிட்டுப்போக ஓராஜ

புகலரியப்புரூர்வச் சக்கரவர்த்தியே
புவியிலெந்தனைவிட்டுப் போனீரோஐயோ ஓராஜ

எப்போதுங்கள்முகங் கண்டுக்களிப்பேன்
இயம்பிடவேசநி பகவான்சோதனையோ ஓராஜ

வசனம்.

ஒருநாளுமென்னை விட்டுப்பிரியாத ப்ரபு என்றைக்கு வுங்கள்முகத்தைக்கண்டு சந்தோஷத்தை யடைவேன் என்னை தனியாகவிட்டுப்போக மனம்வந்ததா அரசே.

மந்திரி சக்ரவர்த்திக்குசோல் வசனம்

...தேபோற்றி தேவரீர் இங்கே இருக்கின்றீர் அடியேன் ...இதிரனல்லவா அரசே,

சக்ரவர்த்திமந்திரிக்குசோல் வசனம்.

மந்திரிவுட்காரும் யெப்போது புரப்பட்டீர் நின்னுடைய சுகமங்கவென்ன மந்திரியே.

மந்திரி சக்ரவர்த்திக்குசோல் புலம்பல்.

...கைதிநியக்குலாயென்ற இந்துஸ்தான்மெட்.

...ரசே! நீங்கள்நகரைவிட்டு வந்தமுதனி துவளாயீல்
...டியேனுமுன்னமதேடி ஆவலாகவேவந்தனே. அர

தெய்வீகப்[illegible]னை அணைந்து சேர்ந்திருப்பதாகச்
சொப்பனமாகவுங்கண்டு ஆவ[illegible]கவே வந்தேனே. ஆர

கர்த்தனைச்செயலாமலே கற்பழிந்தசகியென்மாய்கையோ
[illegible]வாகவுங்கண்டு ஆவலாகவே வந்தேனே. ஆர

வசனம்.

அரசே தங்களாலிந்தப் பட்டணமெல்லாந் தேடி வரும்போது தெய்வீகபுரமென்று சிலரால் கேள்வியுற்று நமதாசனிக்கு நானிருப்பாரென மெத்த ஆபேக்ஷையுடன் வந்து தங்கள் திருமுகத்தைக்கண்டேன் வேந்தே.

சக்ரவர்த்திமந்திரிக்குசொல்புலம்பல்.

இராகம் - ஆஹிரி - ஆதிதாளம்.

மனதாக்கலக்கமெவர் வீரனானாசொல்வேன் கேளுமந்த்ரி-இந்த
மங்கிலத்திற்றாங்கள் பட்டபாடுகள் மெத்த மந்த்ரி. மன

விதியுந்தானுமெவரும் விடப்போறதில்லையென்மந்த்ரி-ஆ
விஸ்வபரமசிவன் சொல்படியே நடந்துதேன் மந்த்ரி. மன

இப்பவும்நீயென்பா லின்பமாயிருந்திடு மந்த்ரி-நாம்
இந்திரப்புரத்திற்கு யேகக் காலம்வருமே மந்த்ரி. மன

வசனம்.

மந்திரி மெத்தவிசனம் நாங்கள்பட்ட இடர்களைச் சொல்ல முடியாதுயெல்லாமந்த சிவப்பெருமான் செயலேல என்னசெய்யலாம் இப்பவும் நீயென்னிட மந்திரியாகயிரு மதிநீரனே.

மந்திரிசக்கரவர்த்திக்குச்சொல் வசனம்.

அப்படியே தேவரீர் பகர்ந்தவண்ணம் தங்க[illegible]த்தில் மந்திரியாக யிருக்கின்றேன் அரசே.

பொது வசனம்.

ஆகோ செப்படியென்றால் புரூரவச்சக்ர[illegible]த்தில மதிசீரனென்கிற மந்திரிவந்து சேர்ந்[illegible] புஷ்பாஞ்சாலி ஜெயப்பிரதையைப்பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

புஷ்பாஞ்சாலி ஜெயப்பிரதைக்குசொல்[illegible]ல்.

இந்துஸ்தான் மியால்-கொப்[illegible]

வந்தனத்துடனே நமஸ்காரம் நமஸ்காரம் அக்காள் வந்

அந்தமுடனேவுந்[illegible]சீராலேதங்கையாலும்
இந்தரையிற்சுக க்ஷேம[illegible]மே. வந்த

நாதனருளாலுன்னை நனி[illegible]வுடனே[illegible]ண்டேனே
பாதாரவிந்தமு மர்கமே. வந்த

வசனம்,

அக்கா ளுமதாசீரால் யேழை தங்கை புஷ்பாஞ்சாலீ சுக க்ஷேமமே என்னைக்காப்பா[illegible]றவேணும் நமஸ்காரஞ்செய்கிறேன் சகோதரியே.

ஜெயப்பிரதை புஷ்பாஞ்சாலிக்கு சொல்

இராகம் - காம்போதி - அடதாளம்.

ஏதுக்குகலங்குகின்ருய் தங்கையேநீ ஏது
வண்டவன் செயல்படி அனைத்தும் வந்தேமுடியும்
அக்காளும நானல்லவோ அஞ்சவேண்டா மிப்போது ஏது

அதிபனுடனே யெந்தன் அரிய சேயனைப்பார்த்து
அதிகசந் தோஷமானேன் அஞ்சவேண்டா மிப்போது ஏது

வசனம்.

ஆ! எனதருமைதங்கை புஷ்பாஞ்சாலி நீயேன்விசனப்படுகிருு யெல்லா மாண்டவன் செயல் நானுமுன் அப்பியார்தான் சந்தோஷமா யெழுந்திருந் தங்கையே.

சக்ரவர்த்திபிள்ளைகளுக்குச்சோல் வசனம்.

எனதருமை சத்தியதார தருமசீலா உங்களைவளர்த்த செங்கமலமென்னு மிடைச்சியை அழைப்பித்துப் பரிசுதருகிறேன் கண்மணி[illegible]ளே.

பிள்[illegible]கள் சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

ஆப[illegible]அந்தம்மனை அழைப்பித்துவெகுமதிகொடுத்தனுப்புங்கள் [illegible]

சக்[illegible]மந்திரிக்குசோல் வசனம்.

[illegible]திரி என[illegible]துபிள்ளைகளை இதுநாள்வரையில் பாதுகார்த்து வ[illegible] செங்கமல[illegible]ன்னு மிடைச்சி ஆயர்பாடியி லிருக்கின்ருள் அதிசீக்கிரமழைப்பிப்பாய் மந்திரியே.

மந்திரிசக்ரவர்த்திக்குச்சொல் வசனம்.

இக்ஷணமே அழைப்பிக்கிறேன் வேந்தே.

மந்திரிகட்டியனுக்குசொல் வசனம்.

கட்டியா ஆயர்ப்பாடியிலிருக்கும் செங்கமலமிடைச்சியை ...க்கிற அழைத்துவாரும்.

கட்டியன்மந்திரிக்குசொல் வசனம்.

இதோ அழைத்துவருகிறேன் மந்திரியே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் ஆயர்பாடியிலிருக்கும் செங்க ...லமிடைச்சி தெய்வீகப்புரத்திலிருக்கும் புரூர்வச் சக்ரவர்த்தி சமு ...ம்வருகிற விதங்காண்க.

செ...லமிடைச்சி சக்கரவர்த்திக்குச்சொல் வசனம்.

அரசே போற்றிபோற்றி அடிமையை அழைத்த விஷய ...மென்ன சுவாமிகளே.

பொது வசனம்.

அகோ செப்படியென்றால் மூர்த்தி இந்திரப்புரத்தை சகி ...சகான் மாய்கையால் அபகரித்துக்கொண்ட அரசர்களியா ...ரும் புரூர்வச்சக்ரவர்த்தி விஷயங்களை தெரிந்து இனிநாமவரை ...போய்வணங்குவோமென சக்ரவர்த்திதிருசமுகம்வருகிற விதம் ...காண்க.

அரசர்கள்சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

போற்றிபோற்றி சக்ரவர்த்தியே.

சக்ரவர்த்தி அரசர்களுக்குசொல் வசனம்.

வாரும்மட்காருங்கள் வேந்தர்களே.

அரசர்கள் சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

தேவரீரிந்த இந்திரப்புரத்தை ஒப்புக்கொள்ளு மி... ...யிலையில் நாங்கள் பாதுகாத்துவந்தோம் மகாசக்ரவர்த்தியே.

சக்ரவர்த்தி அரசர்களுக்குசொல் வசனம்.

மெத்தசந்தோஷம் அப்படியே என்னுடைய இந்திரப்புரத்தை ஒப்புக்கொண்டேன் இராசர்களே.

அரசர்கள் சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

நாங்கள் போய்வருகிறோம் சக்ரவர்த்தியே போற்றிபோற்றி.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் தெய்வீகப் புரத்திலிருக்கும் புரூர்வச்சக்ரவர்த்தி தன்னிரண்டு பெண்சாதி பிள்ளைகளுடன் இந்திரப்புரத்திற்கு வருகிறவிதங் காண்க.

சக்ரவர்த்திமந்திரிக்குசொல் வசனம்.

மந்திரிநம்முடைய நகரமாகிய இந்திரப்புரத்திற்குப் போகவேணு மாகையால் யெல்லாவிஷயங்களையுந் திட்டஞ்செய்வீர் மந்திரியே.

மந்திரிசக்ரவர்த்திக்குசொல் வசனம்.

இக்ஷணமே யெல்லாவிஷயங்களையுந் சித்தப்படுத்துகிறேன் வேந்தே.

மந்திரிகட்டியனுக்குசொல் வசனம்.

கட்டியா எல்லாந்தயார் செய்துவிடு.

கட்டியன்மந்திரிக்குச்சொல் வசனம்.

சீக்கிரத்தில் பயணத்தை வைத்துக்கொள்ளுங்கள், சீக்கிறத்தில் முடிக்கிறேன் மந்திரியே.

சக்ரவர்த்தி செங்கமலமிடச்சிக்கு சொல்

இராகம் - ஜாவளிப்யாகு - ரூபகம்.

ஓ அம்மனே நீசொந்தன் பாலனைச்
சொந்தமாகவே பார்த்துவந்ததாலே
செம்மையுடனிதோ பொன்னுடைத்
திகழாய் தருகிறேன்
அம்மனேநீர் பெற்றுக்கொள்ளும்
அவனியிற்பாலனை பார்காத்துவந்ததாலே.

வசனம்.

அம்மனே நீரென்பிள்ளைகளைப் பாதுகார்த்தபடியால் இப்ப ரிசைப்பெற்றுக்கொள்ளும் மக்களா அம்மனுக்கு நமஸ்காரஞ்செய்யுங்கள்.

பிள்ளைகள் இடைச்சிக்குசொல் வசனம்.

தாயேநமஸ்காரம் யெங்கள் தாயண்டை வாருங்கள் அம்மணி

இடைச்சிபிள்ளைகளுக்குசொல் வசனம்.

அப்படியே வருகிறேன் பாலர்களா.

பிள்ளைகள் ஜெயப்பிரதைக்குசொல் வசனம்.

மாதாவே இந்தம்மாள் தான் எங்களை காப்பாற்றினவள் தாயாரே.

ஜெயப்பிரதை இடைச்சிக்குச்சொல்

இன்னுநம்பிகேனு யென்ற வர்ணமெட்டு.

அம்மணி நீரெங்கள் பிள்ளைகளை தான்
ஆதரித்து வந்ததாலே நமஸ்காரம், அம்
இந்தபாலர்களுக்கு மியம்பயெமக்குஞ்
சொந்தமாதா நீர்தான் செங்கமலமென்னும் அம்

வசனம்.

தாயே இந்தப்பிள்ளைகளை நான்பயின்றும் நீரிதுவரையில் அவர்களைப் பாதுகார்த்தப்படியா லெனக்கும் பிள்ளைகளுக்கும் நீர்தான் மாதா வந்தனஞ்செய்கிறேன் அம்மணி.

இடைச்சி ஜெயப்பிரதைக்குச்சொல் வசனம்.

மெத்தசந்தோஷம் நான்போய்வருகிறேன் அரசியே.

பொது வசனம்.

ஆகோ தெப்படியென்றால் தெய்வீகப்புரத்தி லிருக்கும் புரூர்வச்சக்ரவர்த்தி சமுகம் பரதேசிகாவல்செட்டியார் வருகிற விதங்காண்க.

சக்ரவர்த்தி

பரதேசிகாவல்செட்டிக்குசொல் வசனம்.

வாருமுட்காரும் பரதேசி காவல்செட்டியாரே தங்கள்யோக க்ஷேமங்களென்ன.

பரதேசிகாவல்செட்டி

சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

எல்லாம்சுபக்ஷேமமக நான் தங்களைக் கண்டுபோகவந்தேன் போய்வருகிறேன் அரசே.

பொது வசனம்.

அகோ தெப்படியென்றால் நவகோடி நாராயணச்செட்டியார் புரூர்வச்சக்ரவர்த்தி திருசமுகம்வருகிற விதங்காண்க.

நவகோடி நாராயணச்செட்டி

சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

அரசே நமஸ்காரம்.

சக்ரவர்த்திசெட்டிக்குசொல் வசனம்.

வாருமுட்காரும் நவகோடி நாராயணச்செட்டியாரே நீரொன்றுக்கும் பயப்படவேண்டாம் எனது மறுமைக்கு தவராமலிது நாள்வரையிலெனது களத்திரத்தைப் பாது காத்தபடியால் நீரெங்களுக்கு பிள்ளையானதா லுமக்கு இந்தப்பட்டணத்தை வெகுமதியாக தந்தேன்செட்டியாரே.

நவகோடி நாராயணச்செட்டி

சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

நமஸ்காரம் தங்களனுக்கிரக மென்றுமிருக்கவேணும் நான் போய்வருகிறேன் வேந்தே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் மூர்த்தி இந்திரப்புரத்தை சபிபகவான் மாய்கையால் அபகரித்துக்கொண்ட அரசர்களியாவரும் புரூர்வச்சக்ரவர்த்தி விஷயங்களைத்தெரிந்து இனி காமவனைபோய்வணங்குவோமென சக்ரவர்த்தி திருசமுகம்வருகிறவிதங்காண்க

அரசர்கள் சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

போற்றிபோற்றி சக்ரவர்த்தியே.

சக்ரவர்த்தி அரசர்களுக்குசொல் வசனம்.

வாருமுட்காருங்கள் வேந்தர்களே.

அரசர்கள்சக்ரவர்த்திக்குசொல் வசனம்.

தேவரீரிந்த இந்திரப்புரத்தை ஒப்புக்கொள்ளுமிதுநாள்வரையில்நாங்கள்பாதுகார்த்துவந்தோம் மகாசக்ரவர்த்தியே.

சக்ரவர்த்தி அரசர்களுக்குசொல் வசனம்.

மெத்தசந்தோஷம் அப்படியே என்னுடைய இந்திரப்புரத்தை ஒப்புக்கொண்டேன் இராசர்களே.

அரசர்கள் சக்ரவர்த்திக்கு சொல் வசனம்,

நாங்கள்போய்வருகிறோம் சக்ரவர்த்தியே போற்றிபோற்றி.

பொது - வசனம்.

அகோ ஜெகப்படியென்றால் செய்வீகப்புரத்திலிருக்கும் புரூர்வச்சக்ரவர்த்தி தன்னிரண்டு பெண்சாதி பிள்ளைகளுடன் இந்திரப்புரத்திற்கு வருகிறவிதங்காண்க.

சக்ரவர்த்தி மந்திரிக்குச் சொல் - வசனம்.

மந்திரி நம்முடைய நகரமாகிய இந்திரப்புரத்திற்குப் போகவேணுமாகையால் யெல்லாவிஷயங்களையுந் திட்டஞ்செய்வீர் மந்திரியே.

மந்திரி சக்ரவர்த்திக்குச் சொல் - வசனம்.

இந்தக்ஷணமே யெல்லாவிஷயங்களையுஞ் சித்தப்படுத்துகிறேன் வேந்தே.

மந்திரி கட்டியனுக்குச்சொல் - வசனம்.

கட்டியா எல்லாந் தயார்செய்துவிடு.

கட்டியன் மந்திரிக்குச்சொல் - வசனம்

சீக்கிரத்தில் பயணத்தைக் வைத்துக்கொள்ளுங்கள் சீக்கிரத்தில் முடிக்கிறேன் மந்திரியே.

இந்திரபுரத்துவெட்டியான்

பறையறையும் வசனம்.

டிடிங்! டிடிங்! டிடும்!!! சபையோர்களே பெரியோர்களே என்குஞ்சாங்களே, நஞ்சாண்களே. இன்றைய தினம் நமதரசன் புரூர்வச்சக்ரவர்த்திக்கு இந்திரப்புரத்தைப் பட்டங்கட்டப் போகிறார்களாம் ஆகையால் நீங்கள் சந்தோச்சம் கொண்டாடுங்கள் எங்கூத்தியார்களே.

புரூர்வச்சக்ரவர்த்தி
பட்டாபிஷேகத்தில் போதுபாடல்.
இங்கிலீஷ்நோட்.

இராஜாதி ராஜனே-நய
கெம்பீரனே புரூர்வச்சக்ரவர்த்தி
நாற்றிசையுங் கீர்த்தியோங்கும
நவிலுமிந்திரப் புரத்தைபட்டமும்
நனிவாய்ப் பெற்றனனே — நயகெம்
மன்னர்கள் சூழவே-மதி
மந்திரிபிர தானிகளுடன்
மா! விண்ணவர் மலர்கள்போட
மறையோர் வாழ்த்திட
புலவோர்பாட நனிவாய் — நயகெம்

சபையோர் வாழ்த்திட-சந்
தோஷமுடன் ரதத்தையர்களாடிட
தரணியிற்புலவன் ராமச்
சந்திரன் தமிழால்பாட
கனிவாய்ப் பெருமனையே நடிக்கும்

புரூர்வச்சக்ரவர்த்தி
கொலுவிலுட்கார்ந்து கடவுளைதுதிக்குதல்.

இராகம் - முகாரி - விருத்தம்.

சீர்மலி வுலகமெல்லாந் திகழுடன படைத்துகாக்கும்
வார்மலி விண்ணோர்சூழு மகத்வனே ஞானக்குன்றே
தார்மலி மான்மழுஉகை தரித்தமா! சிவனேயுந்தன்
பேர்மலி பதத்தையென்றும் பேதையான் வணங்கினேனே.

சக்ரவர்த்திமந்திரிக்குசொல் வசனம்.

மந்திரிமெத்த சந்தோஷம் இப்போது சபைரம்மிக்க நடனப்பெண்களை அழைப்பிக்கவேணு மந்திரியே.

மந்திரிசக்ரவர்த்திக்குச்சொல் வசனம்.

இந்தட்சணமே நடனப்பெண்களை அழைப்பிக்கின்றேன் வேந்தே.

மந்திரிகட்டியனுக்குசொல் வசனம்.

கட்டியா அதிசீக்கிரம்-நடனமாதரை அழைத்துவருவாய்.

கட்டியன்மந்திரிக்குசொல் வசனம்.

இந்தட்சணமே அம்மாமார்களை அழைத்து வருகிறேன் மந்திரியே.

115695

நடனப்பெண்கள் வருகிற இந்துஸ்தான் தத்ரா.

மகிபனமகா மண்டலீஸ்பரா
வையமிசையில் புகழோய்யாரா
சரி கம பமாநி நிச
நிச ரிச சரி மகம. மகிபன்

இந்திரப்புசத்தெழில் சுந்தரா
வந்தனமிதோ தந்தோம்சிங்கரா
புலவன்ராமச் சந்திரன்பாடும்
பூமானே வாழிசுகுணதீரா. மகிபன்

சக்ரவர்த்தி மந்திரிக்குசொல் வசனம்.

மந்திரி என்மனது மிகவுஞ்சந்தோஷமானது நடனமாதர்களுக்குபொற்பரிசு கொடுத்தனுப்புவாய் மந்திரியே.

புரூர்வச்சக்ரவர்த்திநாடகம்-முற்றிற்று.

2448

புரூர்வச் சக்ரவர்த்தி கொலுவு.